௨

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் ௰௬ { விக்கிரம—மாசி } மலர் ௰௧


| | | |
|---|---|---|
| ௧. | பொழிற்றொண்டர் கருத்துரைகள் | 383 |
| ௨. | கோச்சி நாட்டு அமைச்சர் நல்வரவு | 390 |
| ௩. | பண்ணும் திறனும் | 391 |
| ௪. | காளிங்கராயப் பெயரினர் | 399 |
| ௫. | மதிப்புரை | 407 |
| ௬. | ஓர் அறிவிப்பு | 415 |
| ௭. | சுவடி மதிப்பு | 416 |
| ௮. | தமிழ் இலக்கிய மாநாடு, மதுரை | 418 |
| ௯. | தமிழ்ச் செய்திகள் | 424 |
| ௰. | நன்கொடைகள் | 430 |
| ௰௧. | தொல்காப்பியம்—பொருள் | 13—28 |



பொழிற்றொண்டர்:

செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவ்சாகிப்,

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பி.ஏ., பி.எல்.


கரந்தைக் கூட்டுறவு மின் இயக்கிப் பதிப்பகம், தஞ்சை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ௧௬ | விக்கிரம—மாசி | மலர் ௧௧ |
| --- | --- | --- |

உ

## பொழிற்றொண்டர் கருத்துரைகள்

### காலஞ்சென்ற வி. சாமிநாத பிள்ளை

தமிழ்ப் பண்டிதர் திரு. வி. சாமிநாத பிள்ளை அவர்கள், விக்கிரம, தை, ௩-ஆம் நாள் (16—1—1941), வியாழக்கிழமை, திருவிடைமருதூரில், காலஞ் சென்றமை கேட்கப் பெரிதும் வருந்துகின்றோம்.

சென்ற நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய ஆறுமுக நாவலர் அவர்கள் மாணாக்கருள், நமது பக்கத்தில் பல தமிழ்த் தொண்டாற்றிவந்த முருகேச பண்டிதர், பொன்னையாப் பிள்ளை, விசுவலிங்கம் பிள்ளை என்னும் மூவருள், விசுவலிங்கம் பிள்ளை அவர்களுக்கு நமது பிள்ளையவர்கள் மகனாவார், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில், நமது தஞ்சை நகரத்தில், பல புலவர்களையும் அழைத்துக், கூட்டங்கள் கூட்டித், தமிழ் மணங் கமழச் செய்த பெருந்தகையார் இவர். காலஞ்சென்ற தமிழ்ப் புரவலர், அரித்து வாரமங்கலம், வா. கோபாலசாமி இரகுநாத இராசாளியாருக்கு நெருங்கிய துணைவராக விருந்து, பல தமிழ்த் தொண்டுகள் ஆற்றிவந்தவர். எளிமையாகவும் இனிமையாகவும் பாவியற்றும்

ஆற்றல் படைத்தவர். இவர் காலத்து இவர் பாடிய கையறு நிலைச் செய்யுட்களையும், சாற்றுக்கவிகளையும், இருபதாண்டு கட்கு முன்பு, பல இடங்களிலும் காணலாம். நாகை நான்மணி மாலை, மங்களாம்பிகை மாலை முதலிய பல நூல்களும் இயற்றி யுள்ளார். தமிழ் வளர்ச்சியே தன் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டவர். எவரோடும் இனிமையாகப் பழகும் இயல்புடை யவர். ஆழ்ந்த சைவப் பற்றுடையவர். இவர் என்றும் இறை வன் திருவடி நீழலில் இன்புற்றமைவாராக!

௦ ௦ ௦ ௦

காலஞ்சென்ற சந்தானம் ஐயங்கார்

திருவையாற்றுக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராக விருந்த திரு. சந்தானம் ஐயங்கார் அவர்கள் காலஞ்சென்றமையைக் குறித்து வருந்துகின்றோம். இவர்கள் பேரறிஞர்(Dr.)திரு. சாமி நாதையருடைய பழைய மாணவருள் ஒருவ ராவர். திருவாரூர் அரசாங்கப் பள்ளிக் கூடத்திலும், திருவையாற்று அரசர் கல்லூரியிலும் ஆசிரியராக விருந்தபோது பயின்ற மாணவர்க ளெல்லாம் இவருடைய பயிற்றும் திறனையும், அன்பையும் குறித்துப் பாராட்டுவார்கள். இவருடைய தமிழ் இசை பலரும் அறிந்ததே யாகும். நம் சங்க விழாக்களில் இவர்கள் பாடிய தூய தமிழ்ப் பாடல்கள் இன்னும் நம் செவியில் இனிமையுடன் ஒலித்துக்கொண் டிருக்கின்றன. இவருடைய வீட்டாருக்கு நம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

௦ ௦ ௦ ௦

இலக்கிய மாநாடு

விக்கிரம, தை, ரு-ஆம் நாள் (19—1—41) முதல், மதுரை யில், தமிழ் இலக்கிய மாநாடு நடைபெற்றது, நாம் சிறப்பாகக் குறிக்கத் தக்க ஒரு செய்தி யாகும்.

இம் மாநாட்டில் தலைமை தாங்கிய இராவ் சாகிப் திருவாளர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுடைய தலைமை யுரை தமிழ்மக்கள் அனைவராலும் படித்துப் பயனடையத் தக்க தொன்றாகும். நமது சங்கத்தை அவர்கள் சிறப்பாகக் குறிப் பிட்டமைக்குப் பெரிதும் நன்றி யறிதலுடையோம்.

இப் பேருரையில், பாடல் சான்ற பழம் பதியாம் மதுரையின் வரலாறு, இலக்கிய வளர்ச்சியோடு ஒட்டிச், சுருக்கமாகவும் தெளிவாகவும் வரையப் பெற்றிருப்பது நம்மவர் நன்கு பயிலத் தக்க தாகும். சென்ற நூற்றூண்டில் சிறந்த தமிழ்த்தொண்டாற்றி, இப்போது நம்மவர் நினைவிலிருந்து சிறிது சிறிதாக மறைந்துவரும், காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார்களாகிய, மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், பேராசிரியர் பே. சுந்தரம் பிள்ளை அவர்கள், சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், வி. கனகசபைப் பிள்ளை அவர்கள், வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் அவர்கள் முதலிய அறிஞர்களைத், தக்க இடங்களில், இப்பேருரை நினைவூட்டுவது பெரிதும் போற்றத் தக்க தாகும். இவ்வாறே, சென்ற நூற்றூண்டின் மொழிநூற் கருவூலம் என்று சொல்லத்தகும் கால்டுவெல் ஒப்பிலக்கணத்தையும், திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் தக்கவாறு குறிப்பிட்டுள்ளார்கள். இக் காலத்தில் எல்லோரையும் ஊக்கப்படுத்தும் இரு பெருங் கிளர்ச்சிகளையும்—மேல்நாட்டுக் கல்வியறிவாலும், தாய்நாட் டுணர்ச்சி மலிவாலும் நிகழ்பவை—தக்கவாறு குறிப்பிட்டுள்ளார்கள். தமிழ் நூல் எழுதுவதற்கு இன்றியமையாதன வாகிய பொது அறிவு, தமிழறிவு எனும் இரண்டனுள், ஒன்றுமட்டுமே உடையார் எழுதும் நூல்கள் இலக்கிய வளர்ச்சிக்குப் பயன் தருவன வல்ல என அவர்கள் கூறும் உண்மை நம்மவர்கள் அனைவரும் அடிக்கடி நினைத்துக்கொள்ள வேண்டிய தாகும்.

o o o o

“ திருவள்ளுவர் ஜைன ரென்பது, ‘மலர்மிசை யேகினன்’ என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளால் ஐயுறவிற் கிடனின்றி உணரலாகும். இவர் வாழ்ந்த திருநகர் இம் மதுரையே யென்பது இவரைப் ‘போதார் புனற் கூடற்கு அச்சு’ என ஆன்றோர்கள் கூறுவதால் அறியலாகும்.” என இவர்கள் கூறுவது, தமிழ் மக்கள் பெரும்பாலராலும் ஒத்துக்கொள்ளக் கூடியதென்று நாம் எண்ணமுடிய வில்லை. இக் கருத்துக்கள் ஆராய்ச்சிக் குரியனவே யாகும்.

திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழ்மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பித்துவரவேண்டுமென்று திட்டம் செய்ததைத் திரு. பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இம் முயற்சி பல ஆண்டுகட்கு முன்னரேயே நம் நாட்டில் தொடங்கப்பெற்றதாகும். தமிழ்மொழியில் தமது கருத்துக்களை வெளியிட முடியாத, அறிவுநூல் வல்ல, பி.ஏ., எல்.டி. தகுதிபெற்ற ஆசிரியர்கள் தமிழில் கற்பிக்க முடியாது பெரிதும் இடர்ப்படுகின்றனர். குளறு படையான மொழியில் தமதாசிரியர் பேசுவதால், மாணவர் தெளிவுபெறாது பேதுறுகின்றனர். கலைநூலறிவு பாழ்படுகின்றது. இது இத்துணை பாராட்டிற் குரியதாவென ஆழ்ந்து நினைக்கற்பாலது. எனினும், திரு. ஆச்சாரியார் அவர்கள் அத் திட்டத்தை வற்புறுத்தியமை தமிழுக்கு நன்மை செய்ய அடிகோலியதாகவே சிலர் கருதுகின்றனர்.

௦ ௦ ௦ ௦

இப் பேருரையின் தமிழ் நடை எளிமைபாகவும், அழகாகவும் அமைந்துள்ளது. சிற்சில இடங்களில் வடசொற்களைப் புகுத்தியுள்ளமை, நடையின் பெருமிதத்தையும் இன்னோசையையும் தடைப்படுத்துவதுபோல எமக்குத் தோன்றுகிறது. எடுத்துக் காட்டாகக், கம்பரைக் குறித்து இவர்கள் கூறும், 'கல்வி மாட்சியும் அறிவின் மாட்சியும் உணர்வு மாட்சியும் உண்மைத் தமிழ் மரபுணர்ச்சியும் ஈடும் எடுப்புமற்ற கவிதாசக்தியும் வாய்ந்தவர் கம்பர்' என்னும் சொற்றொடர் பேரழகு வாய்ந்ததாக இருப்பவும், 'கவிதா சக்தி' என்ற வடசொல் நிலையால் சிறிது ஓசை குன்றியதாகவே தமிழர் செவி கருதுகிறது. 'கவிதா சக்தி' என்னுமிடத்தில் 'கவிமாட்சி' என அமைந்திருப்பின், கம்பருக்கே யன்றித், **தமிழ்த் தாய்க்கே** சூட்டக் கூடிய அணியென இச் சொற்றொடரைக் கூறலாம். இத் தகைய இடங்கள் ஒரு சிலவே யாகும். 'அதிபுராதன', 'வாதப் பிரதிவாதங்கள்', 'பிரசித்த சரித்திர விஷயம்', 'விஷய சூனியம்', 'விமோசனம்' முதலிய வடசொற்கள் நிற்கு மிடங்களில் 'மிகப்

பழைய', 'உரைமாற்றம்', 'யாருமறிந்த வரலாற்றுண்மை', 'பொருளின்மை', 'விடுதலை' முதலிய இனிய, எளிய, தூய தமிழ்ச் சொற்களை அமைப்பது, தூய தமிழை யாவரும் அறியச் செய்யும் முயற்சிக்குத் துணையாக விருக்கும்.

ஓ ஓ ஓ ஓ

திரு. பிள்ளை அவர்கள், 'தமிழ் மட்டும் கற்றவர்களிற்........ பெரும்பாலார்........ வழக்கொழிந்த சொற்களையும் வாக்கிய அமைதியையும் கையாண்டு, கற்போருக்குப் பேரிடர் விளைத்து வருகின்றனர்.' என்று கூறுவதை நாம் முழுதும் ஒப்புக்கொள்ள முடியவில்லை. மொழி வளர்ச்சியைக் கருதுமிடத்து, வழக்கொழிந்த சொற்களைப், புத்துயிர் கொடுத்து, மீண்டும் வழங்கச் செய்வது இன்றியமையாததாகவே யிருக்கின்றது. வாக்கிய அமைதிகளும் அத்தகையனவே. பொருட்செறிவும் பயனுமில்லாத வழக்கொழிந்த சொற்களை வழங்கவேண்டுமென்ற நினைவு ஒன்றுகொண்டே அச்சொற்களை வழங்குவதைவெறுக்கவேண்டுமென்பதே திரு. பிள்ளை யவர்கள் கருத்தென்று நாம் எண்ணுகின்றோம். தூய தமிழ்ச்சொற்கள் இருப்பவும், பிறமொழிச் சொற்களை வழங்க முன்வரும் உளப்பான்மையை நாம் ஒப்புக் கொள்ள முடியாது.

ஓ ஓ ஓ ஓ

பொதுவாக நோக்குமிடத்து, நாம் மேற்குறித்த குறைகள் மிகமிகச் சிலவே யென்பதும், இப் பேருரையின் ஏனைய நற்பகுதிகளை நோக்குமிடத்து, இவை கருதத் தக்கன அல்லவென்பதும் அன்பர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியனவாகும். திரு. பிள்ளை யவர்கள் கூறும் பல நல்லுரைகளுள், 'பழைய மரபைக் கைவிடாது அதனோடு தொடர்புகொண்டு புதிய புதிய துறைகளில் புத்துணர்ச்சியோடு தமிழிலக்கிய வளர்ச்சியைப் பேணுதல் மிக அவசியமாகும்.' என்பதை நாம் உளமாரப் போற்றி வற்புறுத்துகின்றோம்.

## கொச்சி நாட்டு அமைச்சர் நல்வரவு

கோச்சி நாட்டு அமைச்சர் வீரத்திரு. (Sir) ஆர்.கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள், சே. சி. ஐ. இ., நம் சங்கத்துக்கு எழுந்தருளிச், சங்கத்திற்குப் பெருமை செய்த விவரங்களையெல்லாம் பிறிதோரிடத்தில் விரித்துரைத்துள்ளோம். அவர்கட்கும், அவர்களுடன் எழுந்தருளிய திவான் பகதூர் திரு. தி. மூ. நாராயணசாமி பிள்ளை, எம்.ஏ.,பி.எல்.,அவர்கட்கும்,தஞ்சை வளநாட்டுத் தலைவர் அவர்கட்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. செட்டியார் அவர்கள், சங்கத்தின் வரவேற்புப் பாராட்டுரைகளை ஏற்றுப், பேசிய உரைகளிற் கண்ட அருமையான கருத்துக்கள் தமிழரும் பிறரும் நன்கெண்ணிப் பயன் பெறத்தக்கன.

ஐ ஐ ஐ ஐ

## கலைச்சொல் லாக்கத் தனிக்குழு

சில திங்கள்கட்கு முன், சீனிவாச சாத்திரியார் குழுவின் கலைச்சொல் லாக்க முடிபுகளை ஒப்புக்கொண்ட அரசியலார், பணங் கிடைத்ததும், வேலை தொடங்கப்படுமெனத் தெரிவித்திருந்தனர். அதன் பின்னர், பல தமிழ்ச் சங்கங்களும், மாநாடுகளும், செய்தித் தாள்களும், பெரியார்களும் இம்முடிபுகளை வன்மையாகக் கண்டித்துத், தீர்மானங்கள் நிறைவேற்றி, அரசியலாருக்கும் அறிவித்திருக்கின்றனர். இதற்கிடையே, அசில இந்திய கலைச்சோல் லாக்கக் குழு ஒன்று, வேறு கொள்கைகளுடன், பல எதிர்ப்புகளுக் கிடையே, வேலை செய்துவருகின்றது. இக்குழப்பங்கள் போதாவென, இப்பொழுது, சென்னை அரசியலார், எவ்வாறோ பணம் பெற்று, சாத்திரியார் குழுவின் முடிபுகளின்படிக், கலைச்சொல் யாக்க, ஐந்து தனிக் குழுக்களும் (Special Committees), ஒரு கூட்டுக் குழுவும் (Joint Committee) ஏற்படுத்தி, அருஞ்செயலுக் குரிய பெருவூக்கத்துடன் வேலை தொடங்கியிருக்கின்றனர். மொழியியல்புகளுக்கும், மக்களின் மனப் பண்புகளுக்கும் மாறாக நடைபெறும் இம் முயற்சியின்

பயனோ சிறிதாகவும், செலவோ வீணாகவுமே யாகும் என்றெண்ணுகிறோம். இவ்வாறே, பத்தாண்டுகட்கு முன், இவ்வரசியலாரே, இத்தகைய சொற்களையே வெளியிட்டுப், பின்னர்த், தாங்களே புறக்கணித்திருப்பதை மறந்து, இச்செயல் புரிய முன் வந்திருப்பது வியக்கத் தகுந்ததே

௦ ௦ ௦ ௦

இனித், தமிழ்த் தனிக்குழுவின் அமைப்பு முறையோ, சாத்திரியார் குழுவின் அமைப்பு முறைக்கே பெரிதும் ஒத்திருக்கிறது. ஒப்படைத்த வேலைக்குத், திரு. வையாபுரிப் பிள்ளையைத் தவிர, ஏனையோரது தகுதியைக் குறித்து யாம் ஏதும் அறியோம். திரு. வையாபுரிப் பிள்ளையின் கொள்கைகள் சாத்திரியார் குழுவின் முடிபுகளுக்கு மாறாயிருக்கு மென்பதற் கையமில்லை. இவரது தமிழறிவு, பெரும் இடைஞ்சல்களுக்கிடையே, முந்தைய முடிபுகளையும், உடனுழைப்போரின் தமிழ்ப் பயிற்சிக் குறையையும் மீறி மிளிரு மென் றெதிர்பார்க்கிறோம். இவர் அறியக் கூடிய பாடங்கள் சிலவே யெனினும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தாரின் கலைச்சொற்களின் அருமை அறியக் கூடிய இவர், எண்ணம் வைத்தால், எல்லாப் பாடச்சொற்களையும் எளிதினுணர்ந்து, நன்முறைப்படுத்தக்கூடும்; இதற்கு உதவியாகவே திரு.இராமசாமிக்கவுண்டரும், திரு.இராமநாத பிள்ளையும் இருக்கக்கூடும். இவ்வளவன்றி, ஏனைய உறுப்பினர்களைப் பற்றியும், கூட்டுக்குழுவின் தகுதியைப்பற்றியும் வேறு ஒன்றுஞ் சொல்ல நாம் விரும்பவில்லை. தமிழ்க் குழுவிற்குங் கன்னடக் குழுவிற்கும் இவ்விருமொழிகளிலும் தக்க பெயர் பெறாத ஒருவர் கூட்டுவிப்போராக (Convener) அமர்ந்தது இக்காலத்து விந்தைகளுள் ஒன்றாகும். உறுப்பினருள் மிகப் பலர் அரசியல் அல்லது பல்கலைக் கழக ஊழியரா யிருப்பது, அன்னாரின் அடக்க முடைமை, விரும்பியவாறு நடக்கும் ஆற்றலுடைமை பற்றியே போலும். எவ்வாறாயினும், இவர்களின் பெருமைகள் இவர்களின் வேலைகளிலிருந்து பின்னர் மதிக்கப்படும்.

கொச்சி நாட்டு அமைச்சர் நல்வரவு

**கோச்சி நாட்டு அமைச்சர் (திவான்), வீரத்திரு. (Sir) ஆர். கே.** சண்முகம் செட்டியார் அவர்கள், கே.சி. ஐ.ஈ., விக்கிரம, தை, 2ஆம் நாள் (15—1—41), பிற்பகல் $3\frac{1}{2}$ மணிக்கு, நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் பார்த்து மகிழ, இந்து சமய அறநிலைப் பாதுகாப்புத் துறைத் தலைவர், திவான் பகதூர் திரு. தி. மூ. நாராயணசாமி பிள்ளை யவர்களுடனும், தஞ்சை வள நாட்டுத் தலைவர் திரு. விசயராகவன், ஐ. சி. எஸ்., அவர்களு டனும் வந்தார்கள். அதுபொழுது, சங்கத்தாரும், தஞ்சை நகரத் தாரும், சங்க வாயிலில், அவர்களை எதிர்கொண்டு, வரவேற்று மகிழ்ந்தனர். சங்கக் கல்லூரி மாணவர்கள் இன்னிசைப் பாடல் பாடி, அவர்களை அழைத்துச் சென்றார்கள். தேநீர் கூட்டுண்ட பின்னர்க், கோச்சி நாட்டு அமைச்சர் அவர்களுக்குச் சங்கத்தார் அளித்த வரவேற்பு வாழ்த்திதை நம் சங்க அமைச்சர் திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள் படித்தார்கள். பின்னர், இராவ் சாகிப் திரு. ஐ. குமரசாமி பிள்ளை அவர்கள் முற்கூறிய பெரியார் வருகையை அன்புடன் வரவேற்றுப் பேசினார்கள். பின்னர்க் கோச்சி நாட்டு அமைச்சர் பேசிய தாவது :

'பெரியோர்களே ! பேரன்புடன் என்னை இங்கு வரவேற்ற உங்களுக்கு என் நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின் றேன். என் உரிமை அன்பரிற் பலரும் வாழ்ந்து வருவதும், எனது இனிய நண்பர், காலஞ்சென்ற சர். பன்னீர்ச்செல்வம் வாழ்ந்து வந்ததுமான, இத் தஞ்சை மாநகரை என்னுடைய சொந்த ஊராகவே கருதுகின்றேன். உங்கள் வரவேற்பில் கண்ட பல நல்லுரைகளையும் எனக்கு நீங்கள் கூறும் வாழ்த் துரைகளாகவே ஏற்றுக்கொள்கின்றேன். நீங்கள் தமிழ் மொழிக்குச் செய்துவரும் பல தொண்டுகளும் உலகம் நன் கறிந்ததே யாகும். அத்தகைய பெருந் தொண்டாற்றும் உங்கள் முன்னர் யான் தெரிவிக்கவேண்டியவை எவையுள ?

(இதன் தொடர்ச்சியை 419ஆம் பக்கத்திற் காண்க.)

# பண்ணும் திறனும்.

உயர்திரு. சுவாமி விபுலாநந்தர்,
மாயாவதி, அல்மோரா, இமாலயம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும், பழந் தமிழிசை மரபின் சார்பாக யான் புரிந்த விரிவுரைகளைக் கேட்ட அன்பர்கள் அவ்வுரைப் பொருளைத் தொகுத்து விரித்து, நூல்வடிவாக்கித், தருதல் வேண்டு மெனப் பன்முறை கேட்ட துண்டு. அப் பணிக்கு வேண்டிய சில வசதிகள் இன்னும் ஏற்பட்டில. இப்பொழுது, தமிழ் நாட்டிற்கு வெகு தொலைவில் இருக்கிறேன். ஆண்டுகளும் கழிந்துகொண்டு போகின்றன. மனித வாழ்க்கையோ நிலையற்றது. இவற்றை யெல்லாம் நோக்கும்போது, ஆராய்ந்து கண்ட முடிபுகளைச் சிறுச்சிறு பகுதிகளாகத் தமிழ்ப் பொழிலில் வெளியிடுதல் நலமா மென என் அறிவுக்குப் புலப்பட்டது. இதனை யறிந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் தலைவரவர்கள், அன்பு நிறைந்த உளப்பாட் டுரையோடு, ஊக்க வுரையும் அளித்தார்கள். ஆதலினாலே, இப் பணியை மேற்கொண்டேன். இவ் வாராய்ச்சியைப் படிக்கும் அறிஞர்கள், கருத்து வேறு பாடுகள் உளவேல், அவைதம்மைத் தமிழ்ப் பொழில் வாயிலாக வெளியிட்டு, ஆயிர மாண்டு மறைந்து கிடந்த தமிழிசை மரபினைத் தமிழகத்திற்கு நல்குதற்கு உதவி புரிவார்களாக.

நாற்பெரும் பண்.

தெய்வ முணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவுங் கருவென மொழிப.

—தொல். அகத்திணையியல், சூ.கஅ.

எனத் தொல்லாசிரிய ருரைத்தது கொண்டு, யாழின் பகுதி கருப்பொருள் வகையினுள் ஒன்று மென அறிகின்றும். திணை ஐந்தாதலின், யாழின் பகுதியும் ஐவகையவா மென்ப தொருதலை. 'ஈரிரு பண்ணும் எழுமூன்று திறனும்' எனும் இசைநூன் மரபினை நோக்குமிடத்துப், பெரும்பண் நான்கென்பது பெறப்படுகின்றது.

இது, யாழின் பகுதி ஐவகைய என மேற்கண்ட முடிபினோடு, மாறுகொள்வதாகக் காணப்படுதலின், யாழின் பகுதியின் பெயருந், தொகையும், முறையும், பொழுதுரிமையும் என்றின்ன வற்றை ஆராய்ந்தறிதல் இன்றியமையாத தாயிற்று.

சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ண(ப்).........
..........................................
புலர்ந்துவிரி விடியல்............

—மதுரைக் காஞ்சி, சுஙஎ-சுசுசு.

என்றதனால், மருதப் பண் விடியற் காலத்திற்கு உரிய தென்பது பெறப்பட்டது.

திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணீ ராகுளி யிரட்டப் பலவுட
ஞெண்சுடர் விளக்க முந்துற.........
..........................................
முந்தை யாமஞ் சென்ற பின்றை

—மதுரைக் காஞ்சி, சுoச-கூஉo.

என்றதனாற், செவ்வழிப் பண் மாலைக் காலத்துக் குரிய தென்பது பெறப்பட்டது.

அருளா யாதலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக —புறம். கசச.

'மாலைக் காலம் வந்த வளவிலே சிறிய யாழை இரங்கற் பண்ணாகிய செவ்வழி யென்னும் பண்ணிலே வாசிக்கும் பரிசு பண்ணி நினது மழையை யேற்றுக்கொண்ட காட்டைப் பாடினேமாக' என்றமையால், முல்லை நிலமும், கார் காலமும், மாலைப் பொழுதும் செவ்வழிப் பண்ணிற் குரியவா மென்பதும், அது இரங்கற் பண் ணென்பதும் பெறப்பட்டன.

வளரத் தொடினும் வெளவு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சம்..................... —புறம். உசுo.

'இரங்கற் பண்ணாகிய விளரியைச் சென்றுறுகின்ற இனிய நரப்புத் தொடையினது தீங்கை நினைந்து நடுங்கு நெஞ்சம்'

என்றமையால், விளரிப் பண்ணும் இரங்கற் பண் ணென்பது பெறப்பட்டது.

ஐந்திணைக்குங் கூறிய உரிப் பொருளையும், கருப் பொருட் பாலவாகிய யாழின் பகுதியையும், முதற் பொருட் பாலவாகிய சிறுபொழுதையும் உடன்வைத்து நோக்குவோமாக.

| உரிப்பொருள் | யாழ் | பண் | சிறுபொழுது |
|---|---|---|---|
| புணர்தல் | குறிஞ்சி | குறிஞ்சி | யாமம் |
| பிரிதல் | பாலை | பாலை | நண்பகல் |
| இருத்தல் | முல்லை | சாதாரி | மாலை |
| இரங்கல் | நெய்தல் | செவ்வழி | எற்பாடு |
| ஊடல் | மருதம் | மருதம் | வைகறை,விடியல் |

இவற்றுள், யாழின் பெயர் நச்சினார்க்கினிய ருரையாலும், பண்ணின் பெயர் இளம்பூரண ருரையாலும் அறியப்படுவன.

'திறனில் யாழே நெய்தல்யா ழாகும்'

'திறனில் யாழ்விளரி நெய்தனிலஞ் சிவணும்'

என்னுஞ் சேந்தன் திவாகரத்தினும், 'விரவிய திறனில் யாழும் விளரியும் நெய்த லாமே' என்னும் சூடாமணி நிகண்டினும், 'விளரி யாழ்' என்பது நெய்தல் யாழேயா மெனவும், அது திறனில்லாத யாழ் எனவும், அறிகின்றும். செவ்வழி யாழுக்கு இசைநூலாசிரியர் திறம் வகுத்தோதின ராதலின், அது திறனில் யாழாகிய நெய்தல் யாழின் வேறுபட்ட தென்பது புலப்படுகின்றது. நெய்தற் குரிய சிறுபொழுதாகிய எற்பாடு விளரிப் பண் பாடுதற்குரிய காலமாகும். செவ்வழிக் குரிமை மாலைக் காலமா மென முன்னர்க் காட்டினும், மாலையிற் செவ்வழிப் பண்ணும், காலையில் மருதப் பண்ணும் வாசிக்க வேண்டு மென்பது இசை நூன் மரபு. இம் முறை யன்றி, வேறுபட மொழிவார், வரலாற்று முறையை மறந்தோ ராவா ரென்பதைப் பின்வருஞ் செய்யுள் வற்புறுத்து கின்றது.

நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்

மாலை மருதம் பண்ணிக் காலைக்

கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர்............... —புறம். கசஉ.

(வரவு-வரலாற்று முறைமை).

சேந்தன் திவாகரத்தினுள்ளே,

யாமயாழ்ப் பெயர்க் குறிஞ்சி யாழும்
செவ்வழி யாழ்ப்பெயர் முல்லை யாழும்
பாலையாழும் மருத யாழு மென
நால்வகை யாழும் நாற்பெரும் பண்ணே,

எனக் கூறப்பட்டதாதலின், முல்லை யாழே செவ்வழி யாழென அறிகின்றும்; யாமப் பொழுதிற்கு உரியதாகிய குறிஞ்சி யாழிற்கு 'யாம யாழ்' என மற்று மொரு பெயர் உளதென் பதையும் இதனுற் காண்கின்றும். (அச்சிடப்பட்ட சேந்தன் திவா கரப் புத்தகத்தில் நாற்பெரும் பண்ணின் பெயர் கூறுமிடத்து, 'யாமை யாழ்' என்றிருப்பதை 'யாம யாழ்' என்று திருத்திக் கொள்க, முல்லை யாழ்த் திறனுகிய 'யாமை யாழ்' என்பதொன் றுண்டு. அதனை உரிய விடத்திற் காட்டுதும்.)

முல்லையுஞ், சாதாரியும் செவ்வழி யாழிற் குரிய திறனு மென்பது பின்னர்க் காட்டப்படும். செவ்வழி முல்லைக் குரியதாக விருப்ப, அதனை நெய்தலொடு புணர்த்துக் கூறிய இளம்பூரண ரும், பிறரும் வழுவுற்றனரோ வெனின், அற்றன்று; திறனில் யாழாகிய நெய்தல் யாழை இசை நூலாசிரியர் பெரும்பண் வரி சையினின் றகற்றிவிட்டா ராதலின், மாலைப் பொழுதிற் குரிய செவ்வழி யாழினை எற்பாட்டோடுஞ் சார்த்திக் கூறியது ஒரு வாற்ரு னமையு மென்க.

பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென
நால்வகை யாழா நாற்பெரும் பண்ணே —பிங். கஙஎடு.
உரவிய பாலையாழே யுலவிய குறிஞ்சியாழே
மருதஞ் செவ்வழி யாழென்னவகுத்த நாலிசையு நாற்பண்.
—சூடாமணி நிகண்டு.

எனக் கூறிய நாற்பெரும் பண்ணிற்கும் அறுவகைச் சிறுபொழு தையும் பகுத்துக் கொடுக்குமிடத்து,

| | |
|---|---|
| வைகறை, விடியல் | மருத யாழ் |
| நண்பகல் | பாலை யாழ் |

எற்பாடு, மாலை செவ்வழி யாழ்
யாமம் குறிஞ்சி யாழ்

என மரபுபட்டு நிற்கக் காண்கின்றோம்.

பொழுதென மாலைக் கெழுயாமம் வைகறை
யெற்றோற்ற நண்பக லெற்பா டெனவாறே
மாலைக் குரிமை மலர்தலுற் பலம்புள்
சோலைசேர்ந் தொலித்தல் சுரபி கரைதல்
துன்னடைத் தாமரை சுளித்தெனக் கூம்பல்
கன்னடங் காம்போதி கனியப் பாடலே
யாமத் துரிமை யாகரி பாடலே
யூமன் சகோர முவரி யுவத்தலே
காமம லினதங் கரவென் றிவையே
வைகறைக் குரிமை வாரணங் கூவன்
மெய்யெனக் கனவுறன் மீனொளி குன்றல்
வாமமீ னுதித்தன் மாதவர் வாழ்த்த
விராம கலியுட னிந்தோளம் பாடலே
விடியற் குரிமை விலங்கொடு மற்றுயிர்
கடிமகிழ்ந் தெழுச்சி காலொடு கமலம்
விரிபூ மலர்தல் வெண்பனி துனித்தல்
தெரிபூ பாளந் தேசாட்சி பாடலே
நண்பகற் குரிமை நயத்தல் கோகம்
வெண்டே ரோடன் மேதினீ ராடல்
பண்டிசை சாரங் கம்பாட லென்பவே
எற்பாட் டுரிமை வெற்பா னிழனீளல்
வானஞ் சிவத்தல் மறியினங் குதித்தல்
கானமாய்க் காபி கலியாணி பாடலே

—தொன்னூல் விளக்கம்.

எனப் பிற்காலத்து நூலாசிரியர் சிறுபொழுதுரிமை கூறியதை நோக்குங்கால்,

| | |
|---|---|
| மாலைக் குரிமை | கன்னடம், காம்போதி |
| யாமத் துரிமை | ஆகரி |
| வைகறைக் குரிமை | இராமகலி, இந்தோளம் |
| விடியற் குரிமை | பூபாளம், தேசாட்சி |
| நண்பகற் குரிமை | சாரங்கம் |
| எற்பாட் டுரிமை | காபி, கலியாணி |

என நின்றன வாதலின், குறித்த விராகங்கள் மேற்காட்டிய பெரும் பண்ணினோடு தொடர்புடையவா மென அறிகின்றோம்.

## இருபத்தோரு திறம்—நூற்றுமூன்று பண்.

"ஈரிரு பண்ணும் எழுமூன்று திறனும்" (பிங். கந௲அ௰) என்றாராகலின், நாற்பெரும் பண்ணுக்கும் இருபத்தொரு திறங்கள் அமைந்துள்ளன. இவற்றினுள், பாலை யாழ்த் திறன் ஐந்து, குறிஞ்சி யாழ்த் திறன் எட்டு, மருத யாழ்த் திறன் நான்கு, செவ்வழி யாழ்த் திறன் நான்கு, ஆக இருபத்தொன்று.

இவை, அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என வகைக்கு நான்காகி, எண்பத்து நான்காவன. இவற்றின் பெயரும் முறையும் நிகண்டு நூல்களிலே பலவாறு சிதைவுற்றுக் காணப்படுகின்றன. பாட வேறுபாடுகளை யுடன்வைத்து ஒப்பு நோக்கி, இயன்றவரை, சரியான உருவத்தைப் பெற முயல்வாம்.

நிறைந்திடு மராகத்தோடு நேர்திற முறுப்பு மற்றைக்
குறுங்கலி யாசானைந்தும் குறித்தபா லைத்திறங்கள்

எனச் சூடாமணி நிகண்டு கூறும். முதலடியின் மோனைத் தொடையை நோக்க, 'நேர்திறம்' என்பதே பொருத்தமான பாடமெனவும், அஃதன்றி, 'நோதிறம்' எனப் பாடங்கொண்டார் வழுவுற்றார் என்பதும் புலப்படும்.

அராக நேர்திற முறுப்புக் குறுங்கலி
ஆசா னைந்தும் பாலையாழ்த் திறனே

எனப் பிங்கலந்தையும், சேந்தன் திவாகரமும் கூறுகின்றன. அங்ஙனமாதலின், அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான் என்னும் ஐந்தும் பாலை யாழ்த் திறமா மென உணர்கின்றோம்.

தக்க ராக மந்தாளி பாடை
அந்தி மன்றல் நேர்திறம் வராடி
பெரிய வராடி சாயரி பஞ்சமம்
திராடம் அழுங்கு தனுசி சோமராகம்
மேக ராகம் துக்க ராகம்
கொல்லி வராடி காந்தாரம் சிகண்டி
தேசாக்கிரி சுருதி காந்தார மிவை
இருபதும் பாலை யாழ்த்திற மென்ப.

—பிங். கந௲அக.

எனப் பிங்கலந்தையுட் கூறிய இருபதையும், நந்நான்கு ஒரு படியாக, ஐந்து படி செய்து நிறுத்தித், தலைத் தானத்திலே முன்னர்க் காட்டிய அராக முதல் ஆசா னீருகிய ஐந்தினையும் நிறுத்தி நோக்குக. பெரும் பண் வகை பதினாறும் பின்னர்த் தருது மாதலின், மேல் வருபவற்றைப் பதினேழு முதலாக எண்ணிட்டுக் கொள்க.

| | அகநிலை | புறநிலை | அருகியல் | பெருகியல் |
|---|---|---|---|---|
| அராகம் | (17)தக்க ராகம் | (18)அந்தாளி பாடை | (19)அந்தி | (20)மன்றல் |
| நேர்திறம் | (21)நேர் திறம் | (22)வராடி | (23)பெரிய வராடி | (24)சாயரி |
| உறுப்பு | (25)பஞ்சமம் | (26)திராடம் | (27)அழுங்கு | (28)தனுசி |
| குறுங்கலி | (29)சோமராகம் | (30)மேக ராகம் | (31)துக்க ராகம் | (32)கொல்லி வராடி |
| ஆசான் | (33)காந்தாரம் | (34)சிகண்டி | (35)தேசாக்கிரி | (36)சுருதி காந் தாரம் |

'குறுங்கலி யென்பது சோம ராகம்' (பிங். கரு௲அ) எனப் பிங்கலந்தையுட் கூறப்பட்டது. ஆதலினுலே, நான்காம் படியில் முதற்கண் ணின்ற 'குறுங்கலி'க்கு அகநிலை 'சோம ராகம்' என்க. 'ஆசான் றிறம், காந்தாரம்; ஆசா னென்று ஒரு பண்ணிற்குப் பேராகவும் இசைத் தமிழிற் கூறுப' எனச் சிலப்பதிகார அரும்பதவுரையி னுள்ளும், 'ஆசான் சாதி நால்வகை யாவன: ஆசானுக்கு அகச் சாதி காந்தாரம், புறச் சாதி சிகண்டி, அருகு சாதி தசாக்கிரி, பெருகு சாதி சுத்த காந்தார' மென அடியார்க்கு நல்லா ருரையினுள்ளும் (புறஞ்சேரி யிறுத்த காதை) காணலாகும்.

சாரற் றிறமெனி னதுகாந் தாரம். —பிங். கரு௲க.

எனப் பிங்கலந்தை அச்சுப் புத்தகத்தினுட் காணப்படுகிற சூத்திரம், 'ஆசான் றிறமெனி லதுகாந் தாரம்' என்றிருத்தல் வேண்டுமென்பது மேற்காட்டிய சிலப்பதிகார உரைப் பாகத்தாற் றெளிவாகின்றது.

துக்க ராக நேர்திற மாகும். —பிங். சுக௲சு.

எனப் பிங்கலத்தைப் பதிப்பினுட் காணப்படுவது வழுவான பாடமென்பது வெளிப்படை; பாலைக் குரிய திற மெனக் காட்டிய இருபதினுள்ளும், 'துக்கராகம்,' 'நேர்திறம்' என்பன ஒரு பொருட் கிளவி யெனக் கொள்ளிற், பாலைத் திறம் பத்தொன்ப

தாகி, வழுப்படு மாதலின், அகநிலைச் சாதி ஐந்தினுள்ளே, நேர் திறம் ஒன்றினை யொழித்து, ஒழிந்த நான்கிற்கும் பரியாய நாமங் கூற வெழுந்த சூத்திரங்களுள்ளே, முதனின்ற இச்சூத்திரம், 'தக்க ராக மராகத் திறமாகும்' என்றிருத்தல் பொருத்தமா மெனக. இதனையடுத்த சூத்திரம், 'உறழ்ப்புக் காந்தார பஞ்சம மாகும்' (பிங். கரு௲எ) என அச்சுப் புத்தகத்தினுட் காணப் படுகின்றது. அதனை 'உறுப்புக் காந்தார பஞ்சம மாகும்' எனத் திருத்திக் கொள்க. பாலை யகநிலைச் சாதி யாகிய பஞ்சமம் 'காந்தார பஞ்சமம்' என இச் சூத்திரத்தினுற் பெறப்படுகின் றது ; ஆயினும் மருத யாழ்த் திறத்தினுள்ளே யொரு 'காந்தார பஞ்சமம்' காணப்படுகிறது. இனிக், குறிஞ்சி யாழ்த் திறன் வகையை ஆராய்வா னெடுத்துக்கொள்வாம்.

> நைவளங் காந்தாரம் மெய்ப்படு மலையம்
> பஞ்சுர மருளயிர்ப் பாற்றுச் செந்திறம்

எனச் சேந்தன் திவாகரப் பதிப்பினுட் காணப்படுகின்றது. இப் பாடத்தினைப் பின்பற்றிப் போலும், சூடாமணி நிகண்டுப் பதிப் பினுள்ளும்,

> பறைந்த நைவளங் காந்தாரம் படுமலை மருளயிர்ப்புச்
> செறிந்த பஞ்சுரமெய் யாற்றுச் செந்திறங் குறிஞ்சி யென்ப.

என்னும் மூலபாடமும், 'குறிஞ்சி யாழ்த் திறத்தின் பெயர் நைவளம், காந்தாரம், படுமலை, மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், மெய், ஆற்றுச் செந்திறம்' என்னும் உரையுங் காணப்படுகின் றன. மூல பாடத்தின் ஈற்றடி, 'செறிந்த பஞ்சுர மரற்றுச் செந் திறங் குறிஞ்சி யென்ப' என் றிருத்தல் பொருத்த மாகும்.

(தொடரும்)

# காலிங்கராயப் பெயரினர்

## கல்வெட்டு ஆராய்ச்சி.

திரு. சி. கு. நாராயணசாமி முதலியார், பேரூர், கோவை.

(முற்றொடர்ச்சி: துணர் ௰௬, மலர் ௬, பக்கம் 229.)

### III. அதிகாரிகள்.

இனிக், காளிங்கராயப் பெயர் தாங்கிய அதிகாரிகளைப் பற்றிக் கூறுகின்றேன்.

கீழைக் கங்க வமிசத்து அரசர்களில் இருவர், காளிங்க அதிபதிகள் என்ற பெயருடன் கன்னட மொழி வழங்கும் மைசூர் நாட்டு ஒரு பகுதியைச் சீரும் சிறப்புமாக அரசு செய்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவர்களில், 'விஜயநந்தி வர்ம'ப் பெயரினன் ஒருவன் எனக் கோல்லேரு தாமிர சாசனமும், மற்றொருவன், இரண்டாம் சாந்தவர்மப் பெயரினன் எனக் கோமர்த்திக் கல்வெட்டும் கூறுகின்றன. கீர்த்தி சிறந்த பீமகவி (தெலுங்கு நாட்டுப் புலவர்) மேற்காட்டிய சிற்றரசர்கள் காலத்தின ரென்று சிலர் கூறுகின்றனர். இவ் வரசர்கள் காலத்தினரா யிருப்பின், அவர், புலமை நாயகமாக விளங்கிய நன்னயப்பட்ட கவிக்கு மிக முந்திய காலத்தினரா யிருக்க வேண்டும். ஆனல், கவிஜன ஆஸ்ரயம் என்ற ஆந்திர நூலையும், தெலுங்கு மொழி வரலாற்றையும் ஆராயின், அவர்கள் அவ்வளவு முற் காலத்தவராகக் கூற வியலாது. திரிலிங்காதிபதிகள் என்ற விருதுடைய கீழைக் கங்க அரசர்கள் பலர் இருக்கின்றனர். வஜ்ஜிரஹஸ்தன் (வைரக் கையன்), இராசராசன் முதலானவர்கள், திரிலிங்காதிபதிகளாகப் பெயர் சிறந்து விளங்கினர்களே யன்றிக், காளிங்கராயர், காளிங்க கங்கர் என்ற பெயரினர்கள் பெயர் சிறந்து விளங்கினர்க ளில்லை.

இது நிற்கத், தென்னாட்டுக் கல்வெட்டுக்களில் காளிங்கராயர்களு டைய பெயர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன வென்று முன்னரே கூறினேன். அவைகள் அடியில் வருமாறு:

1. **காளிங்கராயன்:** இவன், 'தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து' என்று சிறப்பிக்கப் பெற்ற **தொண்டை** மண்டலத்து இருபத்துநான்கு கோட்டங்களுள் ஒன்றாகிய **மணவிற்கோட்டத்** துள்ள **மணவில்** என்ற ஊரைப் பிறப்பகமாகக் கொண்டவன். இவ் வூருக்கு **அரும்பாக்கம்** என்பது மற்றொரு பெயர். இப்பதி யே மரூஉ மொழியாக, **அரம்பை** என்று வழங்கப்பெறும். **அரம் பையர்கோன்** (அரும்பாக்கத்துக்குத் தலைவன்) என்று இவன் குறிக்கப்பெற் றிருப்பதால், கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக் கூத்தரால் இயற்றப்பட்ட **அரும்பைத் தொள்ளாயிரம்** என்ற நூல் இவ் வதிகாரியின்மீது பாடப்பட்டிருத்தல் வேண்டுமெனக் கருத இடமுண்டு. அல்லாமல், இக் **காளிங்கராயன், சோழ** மண்டலத் தில், கி. பி. 1070 முதல் கி. பி. 1118 வரையில், புகழ் பெருக்கி விளங்கிய **முதற் குலோத்துங்க சோழனுக்கும்**, அவன் மகன் **விக்கிரம சோழனுக்கும்** சிறப்பமைந்த படைத் துணைவனாகத் திகழ்ந்திருந்தனன். இவனது பெரு வீரத்தையும், நலத்தை யும் கண்டு, வியந்து, மகிழ்ந்த **விக்கிரம சோழன்** பெருமை சிறந்த **காளிங்கராயப்** பட்டத்தை இவனுக்கு அளித்துச் சிறப்பித் தான். இப் பட்டத்துடன், **மணவில் கூத்தன், பொன் னம்பலக் கூத்தன், தொண்டையர் கோன், காலிங்கர் கோன், அரம் பையர் கோன், அருளாகரன், அரும்பாக் கிழான், கலிங்கர் ஏறு, நரலோக வீரன்** என்ற பெயர்களையும் கொண்டிருந்தான். அல்லாமல், மா பெரும் வீரனாக இவன் விளங்கினானென்பது,

> 'வடவேந்தர் செல்வமெல்லாம் வாங்கவேல் வாங்கும்
> கொடைவேந்தன் தொண்டையர்கோன்'
>
> '..............................தெவ்வேந்தர் கெட
> வாட்போர்கொள் தொண்டையர்கோன் மன்'
>
> '—வில்லதிரக்
> கோட்டங்கொள் வாள்வேந்தர் கொற்றக் களியானை
> யீட்டங்கொள் காலிங்க ரேறு'

என்ற சாசனப் பாடல்களாலும்;

.............................—வேங்கையினும்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும்—நாடா
தடியெடுத்து வெவ்வே றாசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும்.

என்ற **விக்கிரம சோழ னுலா** வடிகளாலும் தெளியப்படும்.

இத்தகைய வீரன் செம்பொன் அம்பலத்தில் திருக்கூத்து நடிக்கும் ஆட வல்ல பிரானிடத்து அளப்பரிய அன்பும், ஆர்வமும் கொண்டிருந்தான். இவற்றால், இவன், தில்லைக் கூத்தருக்கும், வீரட்டானத்து இறைவருக்கும், செம்பொன் கொண்டு, திருப்பணிகள் பல செய்து, பல நிபந்தங்களையும் விட்டுப், புண்ணியன் எனப் பெயர் சிறந்தான். அம்மட்டோ! மூவர் முதலிகள் பாடிய தேவாரப் பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்துத், தில்லை யம்பலத்துள் சேமித்தும் வைத்தான். இவற்றிற்கெல்லாம் கல்வெட்டுக்களில் ஆதாரங்க ளிருக்கின்றன. ஒன்றை மட்டும் இதனடியில் குறித்திருக்கிறேன். அது,

'ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு முப்பத்தொன்றாவது மலாடான ஜனநாத வள................ திருக் கோவலூர்.................... கொண்.................ல் அரும்பாக் கிழான் ஸ்ரீ மதுராங்கதன் பொன்னம்பலக் கூத்தனான காலிங்க ராச னேன், இத் திருக்கோவலூரான மதுராந்தகச் சதுர்வேதி மங் கலத்துச் சபையார் பக்கல் நான் விலை கொடுத்துக் கொண் டுடைய தெங்கந் தோட்டந் திருவீரட்டான முடையார்க்குத் திருநந்தாவனமாக நான் விட்டுக்கொண்டு..............................'

(S. I. I. Vol. vii. 892) என்பது.

2. வயிரபுரம் **காளிங்கராயன்:** இப்பெயர் தாங்கிய அதிகாரி, தென்னாற்காடு சில்லா, திண்டிவனம் தாலூகாவி லுள்ள *வயிர புரம் என்னும் சிற்றூரில், யாவரும் பரவும் மேவருஞ் சிறப்புடன்

---

* இவ் வயிரபுரத்தை மாயூரம் தாலூகாவி லுள்ள க்ஷேத்திர பால புரம் என்று கூறுவாரும் உளர்

விளங்கி யிருந்தனன். திண்டிவனத்திற்கு வடமொழியில் திந்திரிணிவனம் என்று பெயர். திந்திரிணி = புளி, வனம் = காடு. இதற்குத் திண்டீச்சுரம் என்ற பெயரும் உண்டு. இது எய்மா நாட்டின தென்று தென்னிந்தியா கல்வெட்டு, மூன்றாம் தொகுதி, இரண்டாம் பகுதி, 201 ஆம் பக்கத்தில் குறிக்கப்பெற்றிருக்கிறது. மேற்காட்டிய காளிங்கராயன் இவ்வூரினன் தானென்பது, பாண்டி நாட்டின் உண்ணாடாகிய, வைகை நதிக்கரையின் மாறை நாட்டின் கண்ணதான தஞ்சாக்கூரில் உழுவித்துண்ணும் வேளாண் செல்வனும், மதுரைப் பாண்டியன் தானைத் தலைவனும், அமைச்சனுமான தஞ்சைவாணனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, அகத்துறையில் ஐந்திணைகள் அழகுபெற வமைந்து சிறக்குமாறு, தஞ்சைவாணன் கோவை என்றபெயரில் இனியதோர் நூல் பாடி, அவன் மகிழ்ந் தளித்த நானூற்றிருபத்தைந்து பொற்றேங்காய்களைப் பரிசாகப் பெற்றுப் பெயர் சிறந்த பொய்யா மொழிப் புலவர்*, தமது இளமைக் காலத்தில், இவ் வயிரபுரத்தில் தமிழாசிரியரிடத்துக் கல்வி கற்றுக் கொண்டிருந்தபோது, காளி யருளால் கவி பாடும் வரம் பெற்றுத், தமது ஆசிரியர் கம்பங் கொல்லையைப் பாழ்படுத்திய காளிங்கராயன் பட்டத்துப் பரிமாவை முனிந்து, அது மாண்டு விழுமாறு,

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த வருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ.

—தமிழ்நாவலர் சரிதை.

என்று பாடிய கவியால் தெளிவாம்.

3. தஞ்சைக்கு வடபால் ஐந்து கல்லி லுள்ள திரு ஐயாறு என்ற சிவதலத்து ஓர் ஆலயத்துக்கு ஒரு காளிங்கராயன் பூமி

---

* பொய்யா மொழியார் சரிதை விரிவை யான் எழுதிய பொய்யா மொழிப் புலவர் சரிதத்திற் காண்க.

தானம் ஒன்று செய்திருப்பதாகக் கல்வெட்டொன்று கூறுகிறது.[1]

4. மாறவர்ம திரிபுவன சக்கரவர்த்தி **முதலாம் குலசேகர தேவன்**, கி. பி. 1308 ஆம் ஆண்டில், **காளிங்கராயன்** கட்டளையை நிறைவேற்றினான் என்று மற்றோர் கல்வெட்டுக் கூறுகிறது.[2]

5. **இரண்டாம் இராசேந்திர சோழன்** அல்லது **முதலாம் குலோத்துங்க சோழனுக்கு** அமைச்சனுயிருந்த **சபாநர்த்தனன்** (அவை நடிகன்) என்னும் பெயரினன், **சித்தலிங்க** மடத்தில், **சித்திலிங்கேச்சுரம்** என்ற பெயரில் ஓர் கோவிலைக் கட்டி வைத்ததாக வேறோர் கல்வெட்டுக் கூறுகிறது.[3] இச் **சபா நர்த்தனனுக்குக் காளிங்கராயன், மானவதாரன்** என்ற விருதுப் பெயர்களும் வழங்கிவந்தன.

6. **தொண்டை** நாட்டுச் **சேங்கற்பட்டி**ற்கு அருகிலுள்ள **நெரும்பூரில்** சக்கரவர்த்தி **காளிங்கராயன்** புதல்வன் **வராக பிள்ளை** என்பவன், கி. பி. 1367 ஆம் ஆண்டு, மே மாதம், 24 ஆம் நாளில் ஒரு தானம் செய்திருப்பதாகப் பின்னோர் கல்வெட்டுக் கூறுகிறது.[4]

7. **மதுரை** சில்லா, **குருவித்துறை** என்ற கிராமத்தில் கிடைக்கப்பெற்ற ஒரு கல்வெட்டில், **காளிங்கராயன்** ஒருவன் ஸ்ரீ வைணவ அடியார்களுக்குச் செய்துவைத்த தருமத்தை நிலைநிறுத்தினுனென்று கூறப்பெற்றுள்ளது.[5]

8. ஒரு **காளிங்கராயன்** வேண்டுகோளின்மீது, திரிபுவன சக்கரவர்த்தி **ஸ்ரீ வல்லபதேவனும்**, பாண்டிய அரசன் **ஜடாவர்மனும், இராமநாதபுரம்** சில்லா, **திருப்புத்தூர்** சிவன் கோயிலுக்கு இரண்டு கிராமங்களை நிவேதனத்திற்காகத் தானம் செய்தார்களென்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.[6]

---

1. No. 40 of 1903. 3. No. 367 of 1909. 5. No. 277 of 1910.
2. No. 566 of 1913. 4. No. 271 of 1912. 6. No. 3 of 1908.

9. திரிபுவன சக்கரவர்த்தி **கோனேரின்மை மேல்கோண்டான்** என்ற அரசன், **சேலம்** சில்லாவிலுள்ள ஒரு கோயிலுக்கு, ஒரு கிராமத்தைத் தானம் செய்தான் என்றும், அத் தான சாசனத்தில் **காளிங்கராய அதிகாரி** கையொப்பம் வைத்திருக்கிறானென்றும் பிறிதோர் கல்வெட்டு அறிவிக்கிறது.[1]

10. நெல்லூரி லுள்ள **ஸ்ரீ அரங்கநாயகர்** ஆலயத்திற்குக் **காளிங்கராய அதிகாரி** ஒருவன் இறைவனுடைய நிவேதனத்திற்கு நிலம் வேண்டுமென்று வேண்ட, அரசன் **சுந்தரபாண்டியன்** ஒரு கிராமத்தையே அளித்தானென்று வேறோர் கல்வெட்டுக் கழறுகிறது.[2]

இங்ஙனமே **திருநெல்வேலி** சில்லாவிலும், **ஆழ்வார் திருநகரி**யிலும், **திருச்சிராப்பள்ளி**யி லுள்ள **சேன்னிவனத்திலும், ஸ்ரீரங்கத்திலும் காளிங்கராயர்** பலரது கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

**கோங்கு** மண்டல சதகத்தில் **ஜமீன் காளிங்கராயன்** ஒருவனைப்பற்றிய செய்தியொன்று காணப்படுகிறது. அது அடியில் வருமாறு:

**கோயமுத்தூர்** சில்லாவைச் சார்ந்ததும், **கொங்கேழ்** சிவதலங்கள் ஏழினுள் ஓர் எண்ணை யுடையதுமான **திருநணு (பவாநி)** என்னும் திருத்தலத்தில் விளங்கும் **வானி** ஆற்றின் அணைக்கட்டுக்குக் **காளிங்கராயன் அணைக்கட்டு** என்று பெயர். இப்பெயர் இன்னும் அழிவின்றி அப்படியே விளங்குகிறது. இப்பெயர் இதற்கு வழங்கப்படுகிறதென்பது,

> காவிரி யோடு கலக்குறு வானியைக் கட்டணைநீர்
> பூவிரி செய்களுக் கூட்டிநற் காஞ்சி புகுதவிசை
> தேவர்கள் சாம்பவர் பாவாண ரெல்லாந் தினம்கிழ
> மாவிச யம்பெறு காளிங்கனுங் கொங்கு மண்டலமே

எனக் கூறும் **கோங்குமண்டல சதகத்**தால் தெளிவாம்.

---

[1] No. 4240 of 1913. [2] No. 196 of 1894.

இதுவன்றிக், கொங்கு வேளாளரில் சாத்தந்தை குலத்தின ஞன இக் காளிங்கராயன், கோயமுத்தூர் சில்லா, பொள்ளாச்சி தாலூகா, ஊற்றுக்குழி சமீன்தார் பரம்பரையைச் சார்ந்தவன். இக் கால்வழிய ஞன காளிங்கராயன் ஒருவன், கோடிமாடச் செங் குன்றூர் என்னும் திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தநாரீச்சுரருக்கு, ஏழுமா நிலத்தைச் சர்வமாணியமாகக் கொடுத்ததாகத் திருச்செங்கோடு திருப்பணி மாலே கூறுகிறது. அம் மாலைப் பாடல்,

ஆலிங்க நாகமலே யர்த்தநா ரீச்சுரர்க்குக்
காலிங்க ராயனெனுங் காராளன் —மாலிங்க
மென்றேமா மாந்தைநில மெழுமாவுங் கொடுத்தான்
நன்றே புகழெய்தி ஞன் என்பது.

மேற்கோள் கவி

திரைகொண்ட வாரியை மாலடைத் தான்செழுங் காவிரியை
உரைகொண்ட சோழன்மு ளுளடைத் தானுல கேழறிய
வரைகொண்ட பூந்துறை நன்ஞடு வாழ்கவவ் வானிதனைக்
கரைகொண்ட டைத்தவன் வெள்ளோடை சாத்தந்தை
காளிங்கனே.

இதுவுமது—தனிநிலேக் கவி

எற்று திரைப் பொன்னி கூடுறு வானி யிடைமடங்க
வெற்றி மிகுந்த அதிவீர பாண்டிய வேந்தமைச்சன்
கற்ற வறிவினன் காளிங்கராயன் செய் கால்கழிநீர்
உற்ற வனத்தை வனவய லாக உயர்த்தியதே.

இந்த வீரபாண்டிய அரசன் கோங்கு நாட்டை அரசு செய் திருந்தா னென்பதை, விசயமங்கலம் முதலிய இடங்களிற் காணும் கல்வெட்டுகளும், 1913-14 ஆம் ஆண்டுகளின் கல்வெட்டு (எபிகிராபி) வெளியீடுகளும் நன்கு விளக்கும். கி. பி. 1250, கி. பி. 1280ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இவ்வரசன் விளங்கி யிருந்தான். காங்கேய நாட்டு மயிலரங்கம் வைத்தியநாதர் கோயில் கல்வெட்டில், '....காணியாளர் காவலவரில் பிறை சூடி

வீரப் பெருமாள் ரோகாவும்; வேளாளர் ஆந்தைகளில் சேருமா பிறவியாரும்; மாடைகளில் மாளவராயர் அவிகை மழவராயரும் ........' என்றிருப்பதால் அறியக்கிடக்கின்றது.

**கோங்கு** மண்டலத்தில் கோயில் பூசை, ஊழியம் முதலியன செவ்வனே நடந்தேறுதற் பொருட்டு விட்ட மானியம் முதலிய பல சாசனக் கல்வெட்டுக்களில், **காளிங்கராயன்** என்று கை யெழுத் திடப் பெற்றிருப்பவை பல காணலாம்.

---

## சேர்க்கை

அரசர்களில் **இராயர் பட்டம்** என்ற தலைப்பில், **தமிழ்ப் பொழில்** 225ஆம் பக்கத்தில், **6. சேதிராயர்** என்ற மகுடத்தின் பிறகு அடியில் வருவதைச் சேர்த்துக் கொள்க:

### 7. சேதிராயன்

**இவனுக்குச் சேதியர் கோன்** என்ற பட்டமும் உண்டு. **சேதி நாடு** எனவும் **மலேயமானாடு** எனவும் வழங்கப்படும் நிலப் பரப்பைத் **திருக்கோவலூரி**லிருந்து ஆட்சி புரிந்த சிற்றரசன். **முதலாம் குலோத்துங்க சோழனது** மகன் **விக்கிரம சோழனு**க்குத் திறை செலுத்தி, அவன் ஆணைக் கடங்கியவன். **மைசூர்** நாட்டினரோடு சமர் புரிந்து, வாகை சூடியவன்.

# மதிப்புரை

## ஒப்பியன் மொழிநூல்.

*முதன் மடலம் (திராவிடம்) —முதற் பாகம் (தமிழ்)—1940.*
*எழுதியவர்:* பண்டித புலவ வித்துவ ஞா. தேவநேசன் அவர்கள்.
*பக்கம்: 460. விலை: ரூ. 3—0—0.*

**இது** 82 பக்கங்கள் கொண்ட முன்னுரை யொன்று உடையது. அம் முன்னுரையின்கண்ணே வடமொழிக்குந் தென்மொழிக்கு முள்ள வேறுபாடுகளும், ஆரிய திராவிட நாகரிக வேறுபாடும், ஆரியத்தால் தமிழ் கெட்டது என்பதும், விரிவாகக் கூறப்பட்டுள. முன்னுரையின் பின்னர்த், தமிழ் வாழ்த்தோடு **ஒப்பியன் மொழிநூல்** தொடங்குகின்றது. மொழியின் வகைகளும், மொழியின் பாகுபாடுகளும், மொழிநூலின் நெறி முறைகளும், தொடக்கத்தே, தெளிவாக்கப்படுகின்றன. மொழி மாந்தரமைப்பு என்பதும், அது மக்கள் கூட்டுறவால் ஆபது என்பதும், ஒரே காலத்தில் உண்டான தன்று என்பதும், மொழிக் கலை ஆக்கக் கலை என்ருவது வரலாற்றுக் கலை என்ருவது சொல்லப்படல் வேண்டும் என்பதும், ஒரு மொழி, சில காரணத்தால், பலவாகப்பிரியலாம் என்பதும், மொழி, சில காரணத்தால், திரிதல் உண்டு என்பதும், வழக்கழிதல் உண்டு என்பதும், ஒரே மொழி பேசுவோர் எல்லாரும் ஓர் இனத்தார் அல்லர் என்பதும், மக்கள் நாகரிகத்தைக் காட்டுவதற்கு மொழி சிறந்த அறிகுறி என்பதும், மொழிநூற் கலைக்கு நடுவு நிலைமையும் பொறுமையும் வேண்டு மென்பதும், விளக்கப்பட்டுள. இப்பகுதியில், சிறப்பாகச், சொற் றிரிபுகளுக்கு உரிய பல்வகைப் பெயர்களும், பொருட் டிரிவின் பல்வகைப் பிரிவுகளுடைய பெபரும், அழகாக

அமைக்கப்பட்டுக் காட்டப்பட்டுள. நடுவு நிலைமையும், பொறுமையும், ஒப்பியல் அறிவும் பெற்றிருந்தும், மேனாட்டார் தமிழின் உண்மை நிலையை முற்றுறக் காணமுடியாது போனதற்கு உரிய காரணங்கள் இன்ன என்று, 41, 42ஆம் பக்கங்களிற், குறிக்கப்பட்டிருக்கின்றன. வில்கிஞ்சு (Wilkins), காரே (Carey), கோல்புருக்கு (Colebrooke) முதலான எழுத்தாளர்கள் தமிழ் வடமொழியினின்று வந்தது என்று அறியாது கூறினமைக்கு உரிய காரணங்கள் இன்னவென்று கால்டுவேலரால், திராவிட மொழி ஒப்பிலக்கணம் (மூன்றும் பதிப்பு), 43 முதல் 51ஆம் பக்கம் வரையிற், காட்டப்பட்டவற்றை, இப் பகுதி வலிவுறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

'தமிழின் தொன்மை' என்ற தலைப்பின்கீழே, பாண்டி என்பது முதலிற் காளையைக் குறித்துப், பின்னர்க் காளை போன்ற வயவன் ஆகிய பாண்டியனைக் குறித்தது என்றும், சோளம் என்னுங் கூலப் பெயரினின்று சோழன் என்னும் பெயர் வந்தது என்றும், சாரல் என்னுஞ் சொல்லின் திரிபாகிய சேரல் என்பதிலிருந்து சேரலன் என்னும் பெயர் தோன்றிற்று என்றும் இவ் வாசிரியர் கூறியுள்ளார்.

தோல்காப்பிய வழுக்கள் என்று இவ் வாசிரியர் சிலவற்றைப், பக்கம் 73 முதல் 83 வரை, காட்டுகின்றார். அவை பெரும்பாலும் வாதத்திற் குரிய செய்திகள். நும்,மின் திரிபெயர் நீயிர் என்று சூத்திரம் செய்தது தவறு என்றும், நீம் என்னும் முன்னிலைப் பன்மைச்சொல் நூம் என்று திரிந்து, வேற்றுமை ஏற்குங்கால், நும் என்று குறுகுகிறது என்றும் இவர் காட்டுகின்றார். ஆயினும், இவருக்குத் தோல்காப்பியரிடத் துள்ள மதிப்புச் சிறந்தது என்பது, இவருடைய வாக்கியங்கள் பின்வருவனவற்றால், விளக்கமாகும். 'இங்ஙனம்........ எடுத்துக் கூறியதால், தோல்காப்பியத்தை இழித்துக் கூறினேன் என்று எள்ளளவும் எண்ணற்க. அங்ஙனம் கூறுபவன் கடைப்பட்ட கயவனே என்பதற்கு ஐயமில்லை. இற்றைத் தமிழ் நிலையின் உயிர்நாடி தோல்காப்பியம் ஒன்றே.' (பக். 83).

'தமிழ் நூற் கலைகள்' என்ற தலைப்பின்கீழே பல செய்திகள், பக்கம் 106 முதல் 180 வரை, குறிக்கப்பட்டுள்ளன. தமிழிலக்கியத்தின் உச்சநிலைக் காலம், தமிழரே தமிழ் வளர்த்த காலம், முதலானவற்றைக் குறித்து எழுதிய பிற்பாடு, தமிழின் சொல் வளத்தைத் தமிழர் இன்னம் நன்ருக உணர்ந்து பயன்படுத்திக்கொள்ள வில்லை என்று வரைந்து, மனத்தின் வெவ்வேறு வினைகளைக் குறித்தற்குத் தமிழில் வெவ்வேறு சொல் உள்ளவாற்றை விளக்கப்படுத்துகின்ருர் (பக். 202 — 203). வட இந்திய மொழிகளில் திராவிடக் கூறுகள் உண்டு என்று கால்டுவேலர், சுநீதி குமார சாத்தரிஷி, முதலியவர்கள் ஆங்கிலத்தில் எழுதியவற்றை ஒட்டியும், அவற்றின்மேற் கூட்டியும், இவ் வாசிரியர், 217ஆம் பக்கம் முதல் 220ஆம் பக்கம் வரையுள்ள பகுதியை, எழுதியுள்ளார்.

'தமிழ்த் தோற்றம்' என்னும் பெரும் பகுதியில், சுத்தொலிகள், ஒப்பொலிகள், வாய்ச் சைகை யொலிகள் முதலானவற்ருல் மொழி உண்டாயிற்று என்னும் உண்மை, தமிழ் மொழித் தோற்றத்திற்கு ஒக்கும் என்பது காட்டப்படுகிறது. 'ஏ என்னும் ஒலி, ஒருவனுக்கு உள்ளிருந்து வருவதால், தன்னைக் குறிக்கும் தன்மைப் பெயரடி யாயிற்று' என்று சொல்லி, ஏன் என்பதே யான் என்றும் நான் என்றும் பிற்காலத்தில் திரிந்தது என்கிருர். இது கால்டுவேலர் கருத்தொடு இகலியதேனும், ஏற்றுக்கொள்ளத் தகாததொன் றன்று. தேலுங்கு மொழியில், 'ஏனு, ஏமு' என்று தன்மை ஒருமை, பன்மைகளில் வழங்குவனவும், மாலர் மொழியிலும், குறுக்கு மொழியிலும் 'என், எம்' என்று இப் பொருளில் வழங்குவனவும் இவர் கொள்கைக்குத் தக்க ஆதாரங்கள் ஆதல் கூடும்.

'சொற்கள் தோன்றிய பிற வகைகள்' என்னும் ஓர் உட் டலைப்பின்கீழ்க் காட்டப்படும் உதாரணங்களுள், குட்டி என்பது ஆட்டுக்குட்டி என்பதன் முதற் குறை என்றும், கோ என்பது கோன் என்பதன் கடைக்குறை என்றும், யாய், ஞாய், தாய் என்பன எம்மாய், நும்மாய், தம்மாய் என்பனவற்றின்

சிதைவு என்றும் குறிக்கப்பட்டுள. இவை பொருத்தமுடையன என எனக்குத் தோற்றவில்லை. ஆயினும், இவ் வாசிரியர் காட்டும் பிற பல உதாரணங்கள், 282ஆம் பக்கம் முதல் 286 வரை உள்ளன, பெரும்பான்மையும் மொழிநூற் கலை அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக வுள.

'தமிழ் மொழி வளர்ச்சி' என்ற உட்டலைப்பின் கீழே, மருத நிலத்திலேயே பல சொற்கள் தோன்றின என்றும், மருத நிலத்தரசன் ஏனை நானிலங்களையும் அடிப்படுத்தியபோது, ஐந்திணை வழக்கும் ஒருமொழி யாயின என்றும், இவ் வாசிரியர் கருதுகின்றார். அதற்கு வேண்டிய ஆதாரங்கள், பக்கம் 286 முதல் 289 வரை யுள்ள பகுதியிற், கொடுக்கப்பட்டுள. 'தமிழிலக்கணம்' என்னும் உட்டலைப்பிற், சுட்டெழுத்தும் வினாவெழுத்தும் முதற்கண் நெடிலாகவே இருந்து பிற்காலத்தில் தமிழில் குறிலாயின என்று கூறப்படுகின்றது. இது ஒப்புக்கொள்ளத் தக்கது. 'னகரம் தோன்றுமுன், நகரமே வழங்கிற்று. வெரிந், பொருந், மகிழ்நன், கொழுநன் முதலிய சொற்களை நோக்குக' என்பர் இவ் வாசிரியர் (பக். 291). ஆனால், மகிழ்நன், கொழுநன் என்பன வெரிந், பொருந் என்பன போன்ற பண்டைய வடிவங்களை உடையன என்பது உண்மையாயின், அச் சொற்களின் ஈற்றில் வந்துள்ள னகரம் பண்டைக் காலத்ததே எனத் தோற்றும். அதற்கு வேண்டிய சாமாதானம் இவ் வாசிரியராற் பின்னைய மடலங்களில் எழுதப்படு மென்று எதிர்பார்க்கலாம். உரிச்சொல் என்பதைப் பற்றியுள்ள பல்வேறு கருத்துக்களை எடுத்து ஆய்ந்து, தமது கருத்தாகிய 'உரிச் சொல் செய்யுட் சொல்லே' என்பதை நிறுவ முற்படுகின்றார் (பக். 292—296). 'பெயர்ச் சொல்' என்னும் பகுதியின்கீழே (பக். 298 முதல் 319 வரை), இவ் வாசிரியர் கூறுவன எல்லாம் நன்கு சிந்திக்கத் தக்கன. பெயர் என்பதே பெயல் (பெய்+அல்; பெய்தல்=இடுதல்) என்பதன் திரிபு என்பது இவர் கருத்து. கன்னடத்தில் 'ஹெசரு' என்றும், தெலுங்கில் 'பேரு' என்றும், மலையாளம், தோடர் மொழி, கோடர் மொழி ஆகியவற்றுள் 'பேர்' என்றும்,

இச்சொல் வழங்குவதாலும், யகரம் பெயர் என்ற தமிழ்ச் சொல்லில் அன்றிப், பிற திராவிட மொழிகளின் சொல்லில் வழங்காமையாலும், 'பெய்' பகுதி என்று இவர் கூறுவதை ஏற்றுக்கொள்ள அஞ்சுகின்றேன். ஆனால், முன்னிலைப் பெயர்கள், படர்க்கைப் பெயர்கள் ஆகியவற்றைப் பற்றி இவர் எழுதியுள்ளன ஒப்புக்கொள்ளக் கூடியனபோல் தோற்றுகின்றன. 'பொழுது' என்னுஞ் சொல் முதலாவது சூரியனைக் குறித்துப், பின்பு காலத்தைக் குறித்தது' என்று இவர் எழுதியிருப்பது (பக். 305) தக்கதே யாகும். ஞாயிறு என்னும் பொருளிலே, தேலுங்கில் 'பொத்து' என்றும், கன்னடத்தில் 'ஹொத்து' என்றும், துளுவத்தில் 'பொளுது' என்றும், படகர், குறும்பர் மொழிகளில் 'ஹொத்து' என்றும், கோடர் மொழியில் 'பொத்தே' என்றும், வழங்குவன இவர் கருத்திற் குரிய தக்க சான்றுகள் ஆம்.

வடமரம் (ஆலமரம்) மிகுதியாய் வளருந் திசை 'வடம்' எனப்பட்டதென்பதும், தென்னை மரம் மிகுதியாய் வளருந் திசை 'தென்திசை' எனப்பட்டதென்பதும் இவர் கருத்து (பக். 308). கீழே சரிந்து செல்லுந் திசை கிழக்கு என்றும், மேலே ஏறிச் செல்லும் திசை மேற்கு என்றும் பெயர் பெற்றன எனக் கால்டுவேலர் கூறியிருப்பது உண்மை யெனின், இவர் கூறுவதும் பொருத்த முடைத்தெனக் கோடல் வேண்டும். ஆனால், 'உத்தரம், தக்கணம் என்னுந் தமிழ்ச் சொற்களே உத்தர, தக்ஷிண என்று வடமொழியில் வழங்குகின்றன என்பது தேற்றம்' என்று இவ்வாசிரியர் (பக்.309) கூறுகின்றார். வடக்கு, தெற்கு என்ற சொற்கள் தனித் தமிழ்ச் சொற்களாகத் தமிழர்க்கு இருப்பவும், உத்தரம் தக்கணம் என வேறிரண்டு சொற்கள் தமிழர்க்கே முதற்கண் உரியனவாகக் கோடற்கு வேண்டிய இன்றியமையாமை இன்னது என்று புலப்படுத்தப் படவில்லை.

இனி, இவர், பக்கம் 310 முதல் 312 வரை, காட்டுகின்ற எண்ணுப்பெயர்களின் உட் பொருள்கள் மிக்க ஆராய்ச்சியும் அழகும் உடையன. இப் பகுதி, கால்டுவேலர் திராவிட

எண்ணுப் பெயர்கட்குத் தேடி யுரைத்த அரும் பொருளினும் அரிய பொருளினைப் பெற்றிருக்கின்றது எனக் கூறுதல் புனைந்துரை யன்று. அதனை ஆண்டே நோக்குக. மேலும், 'பெயரிலக்கணம்' என்ற தலைப்பின் கீழே ஆராயப்படுகின்றவற்றுள், வேற்றுமை உருபுகளுக்குக் காட்டப்படும் பழ வடிவங்களும், சொற் பொருளுங் கண்டு இன்புறத் தக்கன. அவற்றைப் பக்கம் 322 முதல் 327 வரை உள்ள பகுதியிற் காண்க. வேற்றுமை உருபுகளெல்லாம் பழைய முழுச் சொற்களினின்று பிரிந்து திரிந்தவை என்றும், அவற்றின் பொருள்களெல்லாம் கண்டறியற் பாலன என்றுங் கால்டுவேலர் கூறிச்சென்றார். திருவாளர் கே. இராமகிருஷ்ணையா என்பவர் வேற்றுமை உருபுகள் சில வற்றிற்குத் தெலுங்கிற் பொருள் கண்டார். இப்பொழுது, திருவாளர் தேவநேசன் அவர்கள் தமிழ் வேற்றுமை உருபுகளின் பொருளை விளக்க முன்வந்தது பாராட்டற் குரித்து. இப் புத்தகத்தில், ஒப்பியல் மொழி நூற் கருத்துக்களைக் கொண்ட சிறப்புடைய பகுதிகளென எனக்குத் தோற்றுபவை இஃதொன்றும், எண்ணுப்பெயர் விளக்கப் பகுதியுமாம். புத்தம் புதிய இக் கருத்துக்களைக் கொண்ட பகுதிகளைப் பெற்றிருப்பது ஒன்றுதானும் நின்று இப் புத்தகத்தின் பெருமையை விளக்க முடியும்.

அதற்கு மேலுஞ் சிறந்த கருத்துக்களுடைய பகுதிகளும் உள. அவற்றுள் ஒன்று, எதிர்கால வினைமுற்றுக்கள், முதற்கண் பாலீறு பெருதிருந்தவை, பின்னர்ப் பெற்றன என்று காட்டும் பகுதி.

உதாரணம்,

| | | |
|---|---|---|
| செய்யுமான் | செய்ம்மான் | செய்வான். |
| செய்யுமாள் | செய்ம்மாள் | செய்வாள். |
| செய்யுமார் | செய்ம்மார் | செய்வார். |
| செய்யுமது | செய்ம்மது | செய்வது. |
| செய்யும | செய்ம்ம | செய்வ. |
| செய்யுமன | செய்ம்மன | செய்வன. |

மடங்களும், திருப்பனந்தாள் மடத்தைப் பின்பற்றித், தமிழை வளர்த்தால், அது சிறந்தோங்குமென்பதும், இவர் எழுதியுள்ள முடிவுரையின் கருத்துக்கள்.

இவருக்குத் தமிழின்கண் மட்டிலாப் பற்றுண்டென்பது இப் புத்தகத்தின் பக்கங்களிலெல்லாம் தெளிவாகின்றது. இவர் 'இலக்கணத்திற் சிறந்தது தமிழ் மொழியொன்றே. ஆகையால், உலகமொழிகள் எல்லாவற்றினும் தமிழே மிகத் திருந்தியது என்பதற்கு எள்ளளவும் ஐய மில்லை' என்ற கொள்கை யுடையவர் (பக். 107). 'சிவபெருமான் தமிழை உண்டுபண்ணினர் என்னுங் கூற்றால் தமிழின் பழமையை அறியலாம் என்று (பக். 71) எழுதுகின்றவர், மொழி மக்கள் கூட்டுறவினாலே ஆக்கப்பட்டது என்னும் மொழிநூற் கொள்கையை முற்றுற அறிந்து, அதற்கேற்ப 275 முதலிய பக்கங்களில் எழுதுகின்றார். இவர், உலகில், ஆதி காலத்தில், ஒரு மொழியே இருந்தது என்னும் கொள்கையைக் கடைப்பிடித்தவராய்த், தமது ஆராய்ச்சிகளை நிகழ்த்தி வருகின்றவராகக் காணப்படுகிறார். இவர், இப் புத்தகத்தில் கூறியிருப்பவற்றைப் பற்றிச் சிலர் ஐயங்கொள்ளலாமென்றும், அவ் வையங்களுக் கேற்ற விடை இம் மடலத்தின் இரண்டாம் பாகத்திலும், இந்நூலின் ஏனைய மடலங்களிலும் உளது என்றும் அறிவித்திருக்கின்றார். தமிழ் திராவிடத் தாய் என்பதை இவர் இம் மடலத்தின் இரண்டாம் பாகத்தில் வெள்ளிடை மலையாய் விளக்கப் போவதைத் (பக். 353) தமிழுலகம் எதிர்பார்த்து நிற்கும் என்பதில் ஐய மில்லை. இம் மடலத்தின் இரண்டாம் பாகத்தில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, குஜராத்தி என்னும் ஐந்தும் பஞ்ச திராவிட மொழிகள் என்ற தொகுப்புடைய என்று காட்டுவதாக வாக்களித்திருக்கின்றார் (பக். 216). 'தமிழ் ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, சுட்டும், வினவும், உயரமும் பற்றிய ஆரியச் சொற்களுள் பெரும்பாலனவற்றிற்கு வேர் என்று விளக்கப்படும்' என 281ஆம் பக்கத்திலும், 'வட மொழியில் வழங்கும் நூற்றுக் கணக்கான சொற்கள் தென் சொற்கள் எனக் காட்டப்படும்' என 364ஆம் பக்கத்திலும், மொழிந்துள்ளார். தமிழ்ச் சொல்லை வட சொல்லாக மாற்றும்

போது வட நூலார் கையாளும் முறைகள் இன்னவென்று பின்னர் விரிவாக விளக்குவதாகவும் விளம்பியுள்ளார் (பக். 89). இவற்றையெல்லாம் இவர் வெளியிட இருக்கும் மூன்றும் மடலம் காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இவருடைய ஒப்பியன் மொழிநூல் என்பது வரவிருக்கும் மற்றைய மடலங்களோடு சேர்த்து வைத்துப் படிக்கத் தக்கது என்பது புலனும். பிற மடலங்களை இவர் வெளியிடுதற்கு வேண்டிய அளவு பொருளாவது இம்மடல முதற் பாகத்தாற் கிடைக்குமாறு செய்ய வேண்டியது தமிழர்தங் கடனாகும். இவ் வாசிரியர் பின்னைய மடலங்களில் இம் மடலத்தினுஞ் சிறந்த வெற்றி பெறுவார் என நம்புகின்றேன்.

**அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ.,**
மொழிநூற் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

## ஓர் அறிவிப்பு.

விக்கிரம தைத் திங்களிற் றோன்றிய தமிழ்ப் பொழிலால் (துணர் 16, மலர் 10) எனக்குப் பொன் முடிப்புத் தரவும் நினைவு மலர் வெளியிடவும் அன்பர்கள் முயன்றுவருவதாகக் குறிக்கப் பட்டுள்ளன. நினைவுமலர் பல ஆன்றோர்களின் கட்டுரைகளைத் தாங்கித் தமிழார்வமுடையார்க்குப் பயன்படுமுறையில் வெளிப் படும் ஆதலின் அவ்வெளியீட்டில் யான் விருப்பமுடையவனே. பொன்முடிப்புப் பெறுவதில் எனக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. என்பால் மெய்யன்புடைய பெரியோர்கள் என் நலங்குறித்து நினைப்பதும் வாழ்த்துவதுமே எனக்கு அருள்கூர்ந்தளிக்குஞ் சிறந்த பொன்முடிப்பாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு அங்ஙனம் கருதிய அன்பர்களுக்கு என் நன்றியறிவையும் புலப்படுத்திக்கொள்கின்றேன்.

அண்ணாமலைநகர்
12—2—'41

மு. கதிரேசன்.

இவ் வாசிரியரின் ஆராய்ச்சியின் பயனுய்க் காட்டப் படுகின்ற முடிபுகளிற் கீழ்க் கண்டவை சிறப்பாக எடுத்து மொழியத்தக்கவை :—

1. செய்தனன் என்பதில், ஈற்றயல் அன் ஆண்பால் ஈறு.

2. முதன் முதல் தமிழில் எல்லாச் சொற்களும் உயிரி லேயே இற்றன.

3. செய்தி என்னும் ஏவல் வினை யொருமை, செய்நீ என் பதன் திரிபாகிய செய்தீ என்பதன் குறை.

4. செய்யாதீ என்பது செய்யாய்நீ என்பதன் திரிபு.

5. உண்மையில் இடைநிலை யென்றும், சாரியை யென்றும் பகுபதத்தில் ஓர் உறுப்பும் இல்லை.

6. அசை நிலை என்ற ஒரு சொல்லும் இல்லை. (இதற்கென இவ் வாசிரியர் காட்டும் உதாரணங்கள், பக். 347 -348, கண்டு மகிழ்தற் குரியன).

மக்கள் முதற்கண் குமரி நாட்டில் தோன்றியிருக்க வேண்டு மென்று சொல்லி, அதற்கு வேண்டிய ஆதாரங்களைச் சுட்டி விட்டு, யூதர் முதன் மக்கள் வகுப்பா ரல்லர் என்பதற்குக் கார ணங்கள் சில கூறி, தமிழே உலக முதன் மொழியாய் இருக்க கலாம் என்பதற்குச் சான்றுகளும் காரணங்களுங் காட்ட முற் பட்டிருக்கிருர், இவ் வாசிரியர். ‘வடமொழி உலக முதன்மொழி யாவதினும், ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது எளிதாய் இருக்கும் என்க’ என்று, 365ஆம் பக்கத்தில், எழுதுகின்றவர், தமது கருத்திற்கு உரியனவாகத் தோற்றிய ஆதாரங்களை முன்னைய ஐந்து பக்கங்களிற் குறித்துள்ளார்.

தமிழே உலக முதல் இலக்கிய மொழி என்பதும், தமிழ், கடன் சொற்களால் தளர்ந்த தன்றி, வளர்ந்த தன்று என்பதும், தென்மொழியை, வடமொழியோடு கலவாமல், தனியே வளர்க்க வேண்டு மென்பதும், தமிழ் நாட்டுக் கிழார்களும் வேளிரும்

# சுவடி மதிப்பு

## ஆகாயவாணி

செய்தவர்: திரு. எம். வி. ஜோண், எம்.ஏ., பி. எஸ்சி.
திரு. வித்துவான் தா. மாசில்லாமணி.

அறிவு நூல்களைத் தமிழில் அமைக்கவேண்டும் பரபரப்பு மிக்கு வரும் இந்நாளில் வெளிவந்துள்ள **ஆகாயவாணி** என்னும் நூல் எவ் வகையிலும் பொருத்தமுடையதே யாகும்.

இதன் ஆசிரியர் இருவருள், அறிவு நூல்களிற் பெரும் பட்டங்கள் பெற்றதோ டமையாது, அறிஞர் வீரத்திரு. **சி. வி.** இராமனிடம் பயிற்சி பெற்றவர் என்றும், கல்வித் துறையில் பதினைந்தாண்டுக்கு மேற்பட்ட தொடர்புடையவ ரென்றும், மற்றொருவர், தமிழ்ப் பயிற்சியும், தமிழ்ப் பட்டங்களும் பெற்றுக், கல்வித் துறையில் இருபத்தைந்தாண்டுக்கு மேற் பட்ட தொடர்புடையவ ரென்றும் அறிகின்றோம்.

கலைப் பயிற்சியும், தமிழ்ப்பயிற்சியும் மிக்க இரு ஆசிரியர்கள் சேர்ந்து எழுதும் இந் நூல் கலைத் தெளிவும், தமிழ் வரம்பும் பெற்றதே யாகும்.

அறிவுநூற் சொற்களைக் கீழைத் தேய மொழிகளில் அமைத்துக் கொள்ளவேண்டு மென்பது எல்லோரும் நன்குணர்ந்ததே. தமிழில் அறிவு நூல் எழுத வருவோர், தமிழ்ச் சொற்களை விடுத்து, வடசொற்களைக் கூட்டிக் கொள்ளும் முறையை நாம் பல விடங்களிலும் மறுத்துள்ளோம்.

இந்நூலும், பல விடங்களிலும், அக் குற்றத்துக்கு உள்ளாகவே யிருக்கின்றது. தமிழ்ச் சொற்களே தமிழ் நாட்டுக்குப் பயன் தருவன வென்பதை ஆசிரியர்கள் மறந்துவிடக் கூடாது.

மூலதரங்கம், வினியோகம், விலோம வர்க்க நியாயம், தூரசிரவணி, தூர திருஷ்டி, மத்தியஸ்தானம் முதலிய பல வடமொழிச் சொற்களும், தொலைபேசி, நிகழ்ச்சி முறை, சுழற்சி,

தொகுதி, ஒலி பெருக்கி, பொறி வல்லாளர் முதலிய தூய தமிழ்ச் சொற்களும் இந்நூலுள் பின்னிக் கிடக்கின்றன. தூய தமிழ்ச் சொற்கள் இந்நூலுள் பல இடங்களிலும் காணப்படு கின்றன வெனினும், மொழிக் கலப்பால் நேரும் குற்றத்தி னின்றும் இது நீங்கியபா டில்லை.

ெ ெ ெ ெ

## கலைமகள்

**கலைமகள்** பொங்கல் மலரை மகிழ்வுடன் வரவேற் கின்றோம். வழக்கம் போலவே, பேரறிஞர் (Dr.) மகா மகோபாத்தி யாயர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் கட்டுரை முதலாகப் பல அறிவாளிகளது கட்டுரைகளைக் கொண்டுள்ளது. இக் கட்டுரைகளுள், 'சோழ மண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும்' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது, மொழியிலக் கணத்தில் கருத்துடைய யாவரும் ஆழ்ந்து படிக்கத் தக்கதாகும். உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் அவர்கள், தங்கள் இயற்கைப் படியே, ஈண்டும், தக்க வரையறைகளை அமைத்துக் கட்டுரை யைத் தந்துள்ளார்கள். தமிழ் இலக்கண எல்லையுள் இது ஓர் வழிகாட்டித் தூணம் என்று கூறலாம். அளவாற் சிறிதெனி னும், பயனால் இது பெரிதே யாகும்.

'தில்லையின் புராதனக் கல்வெட்டுக்கள்' என்னும் கட்டுரை, வரலாற்றுப் பகுதிக்கு ஒருவாறு துணை செய்வதே யாகும். 'கைக்கிளை', 'யுத்த காலத்தில் தூது செல்லும் பறவை கள்' முதலிய கட்டுரைகள் படிப்போர்க்கு இன்பமும் பயனும் தரத் தக்கன. 'புத்தரும் தீண்டாமையும்' என்னும் பாட்டு ஆசிரியரது புகழுக்கு ஏற்றதாகவே இருக்கிறது.

'கப்பலோட்டிய தமிழன்' என்னும் கட்டுரை, தமிழ் மக்கள் மறந்து கொண்டுவரும் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களது சில அரிய செயல்களை, ஏற்ற பொழுதில், நினைவூட்டி வருகிறது. 'கவியும் உருவமும்' என்னும் கட்டுரை, திரு. சிதம்பரநாத முதலியார் அவர்களது தனிப் பண்புக்குத் தக்கதே யாகும்.

பொதுவாகவே எல்லோருக்கும் பயன்படவேண்டுமென்னும் கருத்துடன், பலவேறு வகைப்பட்ட சுவைகளுக்கும் உணவளிக்க வரும் **கலைமகள்** கட்டுரைகள் பலவற்றுள், தமிழிலக்கண வரம்புகளும் மரபுகளும் ஏற்றவாறு போற்றப்படா திருப்பது தமிழ் மக்களின் நிலையைக் காட்டுவதே யன்றி, இதழின் பிழையன்று.

ര ര ര ര

## தமிழுணங்கு

**ஆம்பூரிலிருந்து** வெளிவரும் தமிழுணங்கு 8-ஆம் இதழைக் கண்ணுற்றோம். தமிழ் வளர்ச்சி கருதி எழுந்த திங்கட்டாள்களுள் ஒன்று இதுவென அறிகிறோம்.

பொருள் விளக்க நிகண்டு என்று ஒரு நிகண்டு வெளிவருகின்றது. ஆங்கில நூல்களைத் தழுவிய கட்டுரை யொன்றும், தமிழ்ப் புலவர் வரலாறு கூறும் கட்டுரை யொன்றும், தமிழர் மாண்பு தெரிவிக்கும் கட்டுரை யொன்றும் இதில் காணப்படுகின்றன.

---

## தமிழ் இலக்கிய மாநாடு, மதுரை

விக்கிரம, தை, ௬-ஆம் நாள் (19—1—41) செய்யப்பெற்ற முடிபுகள் :

1. உயர்தரப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர், பேராசிரியர்களை ஒத்த படித்தரத்தில் தமிழாசிரியர்களையும் வைத்து, ஊதியமும் ஏனை ஆசிரியர்களுக்குக் கொடுக்குமளவு புலவர்கட்கும் தரவேண்டியதெனக் கல்வித் தலைவர்களை வேண்டுகின்றது.

2. பேசும்பட ஆராய்ச்சியாளர் குழு (Board of Film Censors) எனும் கழகத்தில், தமிழ்ப் பண்டிதர்களையும் நியமிக்க வேண்டுமென முடிவு செய்கிறது.

3. செட்டி நாட்டு மன்னர் இராசா. சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், திருப்பனந்தாள் மடத்தின் அதிபர் அவர்களும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கான பேருதவிகளைப் புரிந்து வருவது கருதி நன்றி கூறுகின்றது.

4. தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்வதற்கென ஒரு உட்கழகம் நிறுவுகிறது.

(390-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இனித், தமிழ் மக்களுட் பலரும் தமிழ் மொழியை நன்கு பயிலவில்லை என்னும் குறை பரந்து பேசப்படுகிறது. அது உண்மையே. அக் குறைக்குரிய காரணங்கள் பலவுள. அவற்றை நீக்க முயலல் உங்கள் சங்கம் போன்ற சங்கங்களுக்கு உரிய கடமைகளுள் ஒன்றாகும். நான் உயர்ந்த கல்லூரி வகுப்புக்களில் படித்துள்ளேனாலும், நடுத்தர (Intermediate) வகுப்புக்கு மேல் தமிழ் படிக்காமலே பட்டங்களைப் பெற்றுவிட்டேன். அவ்வாறு பெறுவதற்குப் பல்கலைக் கழகப் பாட திட்டம் இடந் தருவதாக விருக்கிறது. நடுத்தர வகுப்புவரையில் படித்த தமிழ்ப் படிப்போ மிகமிகக் குறைந்ததாகும். பழந் தமிழ் நூல்களைப் பயிலவேண்டுமென்னும் பேரவாவால், யான் சிலப்பதிகாரத்தைப் படிக்கத் தொடங்கியபொழுது, என் பயிற்சிக் குறைவை உணர்ந்தேன். பிறகு, ஒரு தமிழாசிரியரைத் துணையாக வைத்துக்கொண்டு, முறையாக, நாள்தோறும் படித்தபொழுது, அதன் இலக்கிய இன்பங்களைத் துய்த்ததோடு, அந் நூலின் ஏனைய பெருமைகளையும் உணர்ந்தேன். இது உலக காவியங்களுள் ஒன்றாகக் கருதப்பெறும் பெருமையுடைய தென்பதையும் நன்கு தெரிந்தேன். இத்தகைய நூல்கள் பலவுள. தமிழ் மக்களில், பல்கலைக் கழகக் கல்வி பெற்றோர் பெரும்பாலார் தமிழறிவில் என் போன்றோராகவே தான் இருக்கக் கூடும். யான் பின்னர்ப் படித்துக்கொண்டது போன்ற வசதி பெரும்பாலாருக்கும் கிடைத்தலும் அரிதாகும். இத் தகைய நிலையில், பல்கலைக் கழகப் ப்பட்டம் பெற்றாரிடம் நாம் என்ன குறை சொல்வது? **கலைப் புலமைக்கு ஒத்த தமிழ்ப் புலமை அமையவேண்டும் என்பது பல்கலைக் கழகப் பாடதிட்டங்களின் நோக்கமாக வேண்டும்-**

மேல் நாடுகளிலோ, எவ்வளவு குறைவாகக் கல்வி நிலை பெற்றவர்களாக விருந்தாலும், எத்தகைய வேறுபட்ட தொழில்களில் அமர்ந்துள்ளவர்களாக விருந்தாலும், விருப்பமிருக்குமாகில், தங்கள் மொழியி லுள்ள அரிய நூல்களைக் கற்று, இன்

புற்றுப் பயனடைதற்கு ஏற்ற வசதிகள் பலவுள. எடுத்துக் காட்டாக ஒன்று பார்ப்போம். எவ்வளவு அரிய நூலாக விருப்பினும், அதை, எவ்வளவு குறைந்த கல்வியுடையவரும் படித்துணருமாறு, தக்க விளக்கவுரைகளுடனும், ஆராய்ச்சியுரைகளுடனும், குறிப்புக்களுடனும், எளிய விலைக்குக் கிடைக்குமாறு நூல்கள் வெளியிடப்படுகின்றன. அத்தகைய வசதி நம் நாட்டில் அறவே கிடையாது. உங்கள் சங்கம் போன்ற உயர்ந்த சங்கங்கள், சிலப்பதிகாரம் போன்ற பழைய நூல்களைத் தக்க விளக்கவுரைகளுடன் வெளியிட முன்வரவேண்டும். பல பழ நூல்களுக்கும் பல பழைய உரைகள் அமைந்துள்ளனவேனும், அவை, கற்றோர்க்கே யன்றி, ஏனையோர்க்குப் பயன் பெறுவன வல்ல. சிலப்பதிகாரத்துக்கு அரும்பதவுரையென்று ஒன்று உண்டு. அதைப் பார்த்தால், ஒரு நண்பர் விளையாட்டாகக் கூறியவாறு, அரிய பதங்களினாலே ஆன உரையாகவே தெரிகிறது. இவ்வுரைகளெல்லாம் என்போன்றோர்க்கு எவ்வாறு பயன் தரும்? இவ் வுரைகளைப் பயிலவேண்டுமானால், அவ்வுரைகளுக்கும் உரைவேண்டும். அவ் வுரைகளும் நூலோடொத்த பெருமையுடையன என்பதும், நூல்போலக் கற்கத் தகுந்தன என்பதும் உண்மை யெனினும், இக் காலத்திய நிலையில், என் போன்றோருக்கு நூலை அறிந்து கொள்வதற் கேற்ற துணையாயிருப்பன வல்ல. இதனால் நான் அவ்வுரைகளைக் குறைவுபடுத்தியதாகக் கருதக்கூடாது.*

இக் காலத்து, அரசியல் உணர்ச்சிகளாலும் கட்சிகளாலும் மொழிசார்பாக சில உணர்ச்சிகள் தோன்றியிருக்கின்றன.

---

* உரைகளுள், அருஞ் சொற்களையும், தொடர்களையும், இலக்கண அமைதிகளையும் விளக்குவன சிலவுள; நூலின் கருத்துக்களால் எழுந்த தேற்றம், ஐயம், முடிபு முதலியவற்றையும் ஆராய்வன சிலவுள; நூலோடு வேறுபல நூல்களை ஒத்திட்டும், மாறுபட்டும் பார்த்துச் சில உண்மைகளை விளக்க வருவன சிலவுள. இவை யாவும் பயன் தருவனவே யெனினும், நூலை அறிந்து இன்புறுவதற்கு, முதற்கண் கூறிய உரையே பெரிதும் பயன்படுவதாகும் என்பதே சொற்பொழிவாளர் கருத்துப்போலும்.—பொழிற்றொண்டர்.

தமிழைப் போற்ற வேண்டும் என்ற உணர்ச்சி மலிந்த இக் காலத்தைக் கைவிடாது, பயன்படுத்திக் கொள்வது தமிழ் வளர்ச்சிக்குத் தக்க துணையாகும். தமிழ்வேறு, ஆரியம் வேறு என்ற பிரிவுணர்ச்சிகளை ஏற்படுத்துவதாகத் தமிழ்ப் பகுதி யாரைச் சில அரசியற் கொள்கையினர் குறைகூறுகின்றனர். இத்தகைய பிரிவுணர்ச்சி ஏற்படுவதற்கு ஆரியப் புலவரும் ஆரியப் பகுதியினருமே அடிப்படை என்பதை அவர்கள் மறந்து விடுகின்றதோடல்லாமல், நடுவு நிலைமையாக விருந்து காண்போ மென்று கூறுவாரும் உணராதிருக்கின்றனர். இவ் வுலகத்தில் ஒரு மொழியேனும் பிறமொழிக் கலப்பின்றி வாழ இயலா தென்பதையும், பிறமொழி கலப்பதனால் குறைபாடுடையது ஆகமாட்டா தென்பதையும் மொழிநூல் உணர்ந்தார் யாவரும் நன்குணர்வர். அவ்வாறிருப்பவும், ஆரியப் பகுதியினர் சிலர் தமிழ் மொழியிலுள்ள சொற்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு, இவை வடமொழியினின்றே தமிழில் வழங்கியது எனக் கூறு வதும், அவ்வாறு கூறும்போது, வடமொழியினின்று தமிழ் மொழி சில சொற்களைப் பெற்று வழங்குகின்றமையால், அம் மொழியினும் தாழ்வுடையது என்பதும், அவ்வாறே தமிழ் மக்களும், தமிழ்க் கலையும், தமிழ்ச் சமய வளர்ச்சி முதலிய பலவும் வடநாட்டுமொழி, கலை முதலியவற்றிற்குக் கீழ்ப்பட்டன என்பதுமான குறிப்புத் தோன்றப் பேசுவதனாலேயே, தமிழ் மக்கள் உள்ளம் புண்பட்டு, இவ்வாறு பிரிவுணர்ச்சி ஏற்பட்ட தாகும். உலகத்துத் தோன்றும் எவற்றையும் தங்களுடையன வாகவோ, தங்கள் கலையின் விளைவாகவோ, கொண்டு பேசுவ தோடு, பிற மொழி, சமயம், கலை, கொள்கை முதலியவற்றை இழித்துக் கூறுவதே ஒருசாரார் தொழிலாக இருந்து வருவது, நல்ல நடுநிலை முறையில் வெறுக்கத் தக்கதே யாகும்.

வரலாற்றுப்படியும், ஆராய்ச்சி முடிவின் படியும் தோன்றும் உண்மைகளை எவரும் மறுக்கார். எடுத்துக்காட்டாக, மலையாள நாட்டு வரலாறெழுதத் தலைப்பட்ட ஒருவர், 'கேரளம்' என்னும் அந் நாட்டுப் பெயர்க் காரணம் கூறத் தொடங்கி, அது வட மொழிப் பெயரென்றே சாதிக்கின்றார். மூவேந்தருட் சேரரால்

ஆளப்பட்டது அந் நாடு. அதனை ஆண்டோர் 'சேரல்', 'சேரலர்' எனப் பழந் தமிழ் நூல்களிற் போற்றப்பெறுகின்றனர். அவர்களைக் குறித்த 'சேரல்', 'சேரலன்' என்னும் பெயர்த் திரிபே, அந் நாட்டிற்குக் 'கேரளம்' எனத் திரிந்து வழங்கப்படுகின்றது என்பதே உண்மைக் கருத்தாம். பாண்டியரே தமிழ் வளர்த்தவர் எனப்பெறினும், சேரர் அவர்க்குப் பிற்பட்டார் அல்லர். ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர்ச் சேர நாட்டை ஆண்ட சேங்குட்டுவனுக்குத் தம்பியாகிய இளங்கோவடிகள் என்பார் செய்த சிலப்பதிகாரம் ஒன்றே இப்பொழுதுள்ள தமிழ் நூல்களுள் முத்தமிழ்ச் சிறப்புடையதாம். இத்தகைய தமிழ் வளர்ந்த சேர நாடு, நூறாண்டுக்கு முன் வரையிலும், தமிழை யொத்த மொழி வழக்கினைக் கொண்டிருந்த தென்பதற்கு அந் நாட்டிற் கிடைக்கும் பழைய சாசனங்களும், அப்பொழுதியற்றப்பட்ட நூல்களுமே சான்றாவனவாம். இவ்வாறு அண்மைக் காலம் வரையிலும் தமிழொடு தொடர்புடைய மலையாள மொழி இற்றை ஞான்று அறவே திரிதற்குரிய காரணங்கள் பலவாம். நாட்டு மக்கள் குலமுறைத் தொடர்பிலும், நடையுடை முறைகளிலும், சமயச் சடங்குகளிலும் ஆரியரையே பின்பற்றத் தொடங்கியதுபோல், மொழி வழக்கிலும் அவர் பேசும் வடமொழிச் சொற்களையே கலந்து பேசுதலைத் தமக்கு உயர்வாக மதித்தனர். எவ்வளவுக் கெவ்வளவு வடமொழிக் கலப்பு மிகுதி யாகின்றதோ, அவ்வளவுக்கும் உயர்வெனக் கருதி; அத்தகைய மொழி யமைப்பையே நாளும் போற்றி வளர்க்கத் தலைப்பட்டனர். அதனால் வடமொழிச் சொற்களும், நடை யமைப்பும் பெருகவே, தமிழ்ச் சொற்களும் அவற்றின் அமைதியும் அருகித், தமிழொடு தொடர்பற்றது மலையாளம் என்னும் நிலை அணுகுகின்றது. நான் அந்நாட்டில் அலுவல் பார்ப்பதால், அந்நாட்டுச் சிற்றூர் மக்களொடு பேசுமளவுக்கு மலையாள மொழியிற் பயிற்சி பெற்றேன். பெரும்பாலும் நம் தமிழ்ச் சொற்களைக் கொண்டு பேசுதலே எனக்கமைந்த பயிற்சி. ஆனால், நான் பேசுகின்ற பேச்சு அந்நாட்டுப் பொது மக்களுக்கு எளிதின் விளங்குகின்றது. மலையாளங் கற்றுத்

தேர்ந்தோர் பேசும் பேச்சு அவர்களுக்கு நன்கு விளங்குவதில்லை. கற்றோ ரெனப்படுவோர் வடமொழியினை மிகுத்துப் பேசுவதே அவர் பேச்சு விளங்காமைக்கும், தமிழ்ச் சொற்களைப் புகுத்துவதே என் பேச்சு விளங்குதற்கும் உரிய காரணங்களாம். இவ்வாறு தமிழ்மொழி மலையாளமென வேறு மொழியாய்ப் பிரிந்து, தொடர்பற்றுப் போன வரலாற்றையறிந்த தமிழ் மக்கள், இனிப் புதுவகையின் நாட்டிடைத் தோன்றும் வேறுபாடுகளையும் அறவே ஒழித்து, தமிழுணர்ச்சி தலைசிறந் தோங்கி யுள்ள இவ்வருமையான காலத்திலேயே தமிழ் வளர்க்கும் நன்முயற்சியை மேற்கொள்வார்களாக!

தமிழின்பா லுள்ள அன்பால் இச் சிறு பொழுதில் சிலவற்றைக் கூறினேன். ஒரு தமிழன் என்ற முறையில் என்னை வரவேற்றுப் பாராட்டிய சங்கத்தார்க்கும் மற்றைய பெரியார்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.'

பின்னர், நம் சங்கத் தலைவர் அவர்கள், நம் அழைப்பிற்கிணங்கி, இங்கு வந்து சங்கத் தொண்டிலீடுற்ற அப்பெரியார் அவர்களுக்கு நன்றி கூற, வரவேற்பு விழா இனிதே நிறைவேறியது.

## மெய்கண்ட சாத்திர மாநாடு, திருநெல்வேலி

தென் னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைச் சார்ந்த தென் னிந்திய சைவ சித்தாந்த சங்க ஆதரவில், வருகிற வேனிற் கால விடுமுறையில், அதாவது சித்திரைத் திங்கள் 29-ஆம் நாள் முதல் 5 நாட்கள் இம் மாநாட்டைத் திருநெல் வேலியில் நடத்தத் திருவருளை முன்னிட்டுத் தீர்மானித்திருக் கிறோம்.

மெய்கண்ட நூல்கள் பதினுன்கையும் ஆராய்ந்து, அவ் வாராய்ச்சிக் குறிப்புகளைச் சொற்பொழிவுக் கட்டுரைகளாகத் தொகுத்து அச்சிட்டு, விழாக் காலத்திலேயே வெளியிடக் கருதி யுள்ளோம். கட்டுரைகள் வெறும் ஆராய்ச்சியாகவே இருக்கு மானல், சித்தாந்த நூலுணர்ச்சி பெற விரும்பும் எல்லா மக்களும் படித்து உண்மை காண முடியாதிருக்குமாதலால், மேற்குறித்த நூல்களின் பொருள்களைச் சொற்பொழிவு வடிவாகவே எழுதி யளிக்க வேண்டுமென்று, சொற்பொழிவு செய்யும் பெரியோர் களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மேல்மேல் நடைமுறைகளைப் பற்றிய குறிப்புக்கள் பின்னர் வெளிவரும்.

### வேண்டுகோள்

மக்களுக்கு மக்கட் பண்புகளை அளித்து, உலகியலை இனி மையாக நடைபெறச் செய்து, இருமைப் பயன்களையும் ஒருங்கே உதவுவது சமய உண்மைகளே யாகுமாதலால், இம் மாநாடு சிறப்பாகவும் பயன் பெறவும் நடைபெறுவதற்கு நாடு முழுமை யும் தக்கவாறு கலந்துகொள்ளவேண்டு மென்று விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சித்தாந்த ஆராய்ச்சி மிக்க அறிஞர்களும், அன்பர்களும் அங்கங்கே இருப்பார்க ளாதலால், நேயர்கள் அன்புகூர்ந்து, அறிந்தவரையில் அவர்களைப்பற்றி அவரவர் முகவரிகளுடன் (விலாசம்) திருநெல்வேலிக், கீழரத வீதிக், கழக நிலையத்துக்கு அறிவித் துதவுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

அன்பன்,

**வ. திருவரங்கம் பிள்ளை**

அமைச்சர்,

மெய்கண்ட சாத்திர மாநாடு, திருநெல்வேலி.

## பழநி வேத சிவாகம பாடசாலைத் திறப்பு

**பழநி**, தண்டாயுதபாணி சுவாமி தேவதானத்து ஆதரவில், வேத சிவாகம பாடசாலை, 23—1—41உ காலை, ஊர்க்கோயிலில், சென்னை இந்து மத நிலையப் பாதுகாப்புக் கழகத் தலைவர், திவான் பகதூர் திரு. தி. மூ. நாராயணசாமி பிள்ளை அவர்களால் ஆரம்பம் செய்யப்பெற்றது. சிவத்திரு. ஈசானசிவாச்சாரியார், பாடசாலையின் நோக்கம், இன்றியமையாமை முதலியவற்றைக் குறித்துப் பேசித், திரளாகக் கூடியிருந்த குருக்கள், பண்டாரங்கள் குடும்ப மாணவர்களுக்குத் தொடக்கப் பாடம் சொல்லி வைத்தார். பிற்பகலில் கூடிய பொதுக் கூட்டத்தில், திரு. நாராயணசாமி பிள்ளை அவர்கள் பாடசாலையின் இன்றியமையாமையையும், இந்த நல்ல வாய்ப்பில், கோயிலில் பணிபூண் டொழுகும் குருக்களும், பண்டாரங்களும் தங்கள் பிள்ளைகளை இப் பாடசாலைக்கு அனுப்பிப் பயன் படுத்திக்கொள்ளவேண்டு மென்பதையும், இதனல் நமது சமய நிலையங்கள் விரைவில் சீர் பெற மக்கள் நல்வாழ்வு எய்துவார்களென்பதையும் எடுத்துக் கூறினுர்கள். பிறகு சிவத்திரு. ஈசானசிவாச்சாரியார் அவர்களும், கோவைச், சைவச் சிவமணி திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் கோயில் நடைமுறைகளைத் தெளிவாக எடுத்துரைத்துப், பாடசாலையில் ஒவ்வொருவரும் தனிப்பொறுப்பையும், உரிமையையும் கொண்டாடவேண்டு மென்றும் எடுத்துரைத்தார்கள். தேவதானச் செயலாளர் (Executive Officer) திரு. ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை யாவருக்கும் நன்றிகூறித், தமிழகத்திலே, பழங்கோயில்களில், வியாகரணம், வேதம், ஆகமம், கலைகள், ரூபாவதாரம் முதலிய கலைகளை வளர்த்தற்கான, ஜனநாதமண்டபம், வியாகரண தான மண்டபம் முதலிய கல்விச் சாலைகள் இருந்து வந்தனவென்றும், அம்முறையில் இன்று தொடங்கும் பாடசாலை, முருகனது அருளால், பெரும் பயனைத் தருமென்றும் கூறினுர். மடாலயங்களும் ஏனைய பெரியார்களும் அனுப்பிய ஆசிமொழிகள் குறிக்கப்பெற்றன.

## ஔவைத் தமிழகம், செங்கைமா (வடஆற்காடு)

**1941**, சனவரி, 18 ஆம் நாள், சேனாவரையர் திருநாள் கொண்டாடப்பெற்றது. வேலூர், ஊரிஸ் உயர்தரக் கலைக்கூடத் தலைமை யாசிரியர் திரு. க. ப. மகிழ்நன் (க. ப. சந்தோஷம்) அவர்கள் தலைமை தாங்கினார்கள். செங்கைமா, உயர்தரக் கலைக்கூடத் தலைமை யாசிரியர் திரு. வே. தா. மா. திருநாவுக் கரசுச் செட்டியார், பி. ஏ., எல். டி., அவர்கள் திருநாட் கொண்டாட்டத்தைத் தொடங்கிய பின்னர், கீழ்க்காணுமாறு சொற்பொழிவுகள் நிகழ்ந்தன:

1. சேனாவரையர் வரலாற்றாராய்ச்சி—திரு. இலக்குமண முதலியார்.
2. சேனாவரையர் இலக்கண முடிபுகள்—திரு. துளசி அம்மையார்.
3. சேனாவரையர் உரை நயம்—திரு. வேதாத்திரி பிள்ளை, பி. ஏ., எல். டி.
4. சேனாவரையர் — திரு. மா. கந்தசாமி முதலியார்.
5. இளம்பூரணரும் சேனாவரையரும்-திரு. ப. கோவிந்த னார்.

ο ο ο ο

## திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகம்,

*அரசர் கல்லூரி, திருவையாறு.*

பதின்மூன்றாவது ஆண்டுவிழா, விக்கிரம, தை, உசு ஆம் நாள் (8-2-41) நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் பல்கலைப் புலவர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அவர்கள் தலைமையில் அப் பல்கலைக் கழகத்துத் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. சிதம்பர நாதச் செட்டியார் அவர்கள் எம். ஏ., 'தமிழ்த்தாய்; என்னும் பொருள் மேல் சொற்பொழிவாற்றினார்கள்.

## சரோஜினி வாசகசாலை, ஜெயங்கொண்டபுரம்.

மூன்றாவது ஆண்டுவிழா, விக்கிரம, தை, உஎ-ஆம் நாள் (9—2—41) நிகழ்ந்தது. கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர், செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவ் சாகிப் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், பி. ஏ., பி. எல்., தலைமை தாங்கினார்கள். திருவையாற்று அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், கரந்தைக் கவியரசு, திரு. ஆர். வேங்கடாசலம் பிள்ளை அவர்கள், முதலியோர் அரிய பொருள்களைக் குறித்துப் பேசினார்கள்.

௦ ௦ ௦ ௦

## திருநெல்வேலிப் புலவர் மாநாடு.

இம் மாநாடு 1941, பிப்பிரவரி, 10 ஆம் நாள், திருவாளர், இராவ் சாகிப், முதுபெரும்புலவர், தமிழ்ப் பெருங்கவி, வே. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில், பாளையங்கோட்டையில், நடந்தது.

புலவர்கட்குப் பாடசாலைகளில் மதிக்க அளவு ஊதியம் உயர்த்தப்பெறவேண்டுமெனவும், இந்தியப் பொதுமொழியும், இந்தியப் பொது எழுத்தும் வேண்டப்படுவன வென்றும், தமிழ்ப் புலவர்கள் வடமொழியையும், வணிகர்கள் இந்துத்தானி மொழியையும் பயிலவேண்டுமெனவும் கூறினர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்தும், மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்தும் இதுபோது வெளிவரும் நூல்களை நோக்க, தமிழ்மொழியின் யாப்பு (Syntax) க்குலைந்து, இலக்கண அமைதி சிதைந்து வருகிறதெனவும், இது வருந்தத் தக்கதெனவும் கூறினர்.

தகுதிபெற்ற புலவர்களே பாடசாலைகளில் தாய்மொழி ஆசிரியர்களா யிருக்கலாமெனவும், இவர்கள் பொருட்டு ரூ. 20 விழுக்காடு அரசியலார் பாடசாலைகட்குக் கொடை (Grant) தர வேண்டுமென்றும் முடிபுகள் செய்யப்பெற்றன.

## வார்தா கல்வி முறை.

இம்முறை ஒரிசா மாகாணத்தில் சோதனைக்கு நிற்கவில்லை.

ஆசிரியர்களை வார்தாமுறையில் பயிற்றுவிக்க 1939 சூனில் ஒரு கல்லூரி அமைக்கப்பெற்றது. 1940 பிப்ரவரியில் மாணவர் கட்கென 15 பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டன. ஒரு ஆண்டுவரை சோதனையாக நடத்துவதென முதலில் கருதப் பெற்றது. வார்தா கல்வி முறையைப்பற்றிப் பேசப்பட்ட மறுப்புகளில் குறித்த குறைபாடுகள் எல்லாம் உண்மை என்றே தெரியவந்தது எனும் முடிபுக்கு ஒரிசா மாகாணத்தின் அரசிய லார் வந்தனர். தொடக்கப் பள்ளிக்கூடங்களை விட வார்தாப் பள்ளிகள் செலவு மிகுந்தவை. ஒவ்வொரு மாணவனும் தொழில் முறைக் கல்வியில் தலைக்கு ரூ. 3-8-0 விழுக்காடு ஈட்டுவான் என எதிர்பார்த்ததற்கு மாறாக அரை ரூபா தான் ஈட்டமுடிந்தது. பள்ளிக்கூடங்களை அவற்றின் வருவாயினின்றே நடத்தக்கூடும் என எண்ணியது அவலமாயிற்று. வரவைவிடச் செலவு பன் மடங்கு மிகுதியா யிருந்தது.

வார்தா முறையால் கல்வியாகினும் வளம்பெறுமானால், செலவு சற்று மிகுந்தாலும் பொருட்படுத்த வேண்டுவதில்லை. இங்கு கற்பிக்கப்பெறும் கல்வி மிக்க இழிநிலையில் காணப்படு கின்றது. வார்தா முறையில் பலதிறப்பட்ட தொழிற்பயிற்சிக்கு இடந்தருமெனக் கூறப்பட்டது. ஒரிசாவில் நூல் நூற்றல் மட்டும் இப்பள்ளிகளில் நடந்தது; வேறு தொழிற் பயிற்சி களைத் தரக்கூடிய ஆசிரியர் கிடைப்பது மிக அருமையெனத் தெரிந்தது. வார்தா முறையில் பள்ளிக்கூட நேரத்தில் மூன் றில் இரண்டுமணி நேரம் மாணவர்கள் தொழில் பயிலவேண்டு மென்பதும், மூன்றில் ஒரு மணிநேரம் கல்வி கற்கலாமென்பதும் ஏற்பாடு. அதாவது, 3 மணி 20 விநாடியளவு, மாணவர்கள், பல திறப்பட்ட திறமைகளை வளர்க்கமாட்டாத கைத்தொழில்களைப் பழகுவதில், மனமும் உடலும் சோர்வுபடக் கூடிய வேலைகளில் ஆழ்த்தப்பட்டார்கள். பள்ளிக்கூடங்கள் என்று கருதப்படு

வனவெல்லாம் விரைவில் நூல் நூற்குமிடங்களாக மாறக்கூடிய நிலைக்கு வந்தன. உடல் சோர்ந்து சக்கரங்களைச் சுழற்றச் செய்வதினும், காடுகளில் மாடு கன்றுகளை மேய்க்கச் செய்வதும், இயற்கைப் பொருள்களை பாடநூல்களாகக் கொள்ள விடுவதும் மேலானது எனத் தெரியவந்தது.

மாணவர் பொருட்டோ, கல்வியின் பொருட்டோ வார்தா முறை ஏற்படுத்தப்பெறவில்லை என்பதும், ஒரு அரசியற் கொள்கையினரின் சின்னம் என அமைக்கப்பெற்றதென்பதும் கண்கூடாயிற்று. இன்ன பல காரணங்களால், வார்தா முறையில் தொடங்கப்பெற்ற ஆசிரியப் பாடசாலை ஒன்றும், மாணவப் பாடசாலை 15உம், பணக்கேட்டையும் கல்விக் கேட்டையும் விளைப்பதால், அடுத்த மாதமே மூடப்படவேண்டுமென ஒரிசா மாகாண அரசியலார் முடிவு செய்தனர்.

## சங்கச் செய்திகள்.

நிகழும் விக்கிரம, தை, ௫ ஆம் நாள் (18—1—41), நம் சங்கத்தில் சென்னைப் பல்கலைக் கழக இசைப் பேராசிரியர், திரு. பி. சாம்பமூர்த்தி ஐயர் அவர்கள், பி.ஏ., பி.எல்., (Professor of Music, Madras University) 'தமிழ் இசைப் புலவர்' எனும் பொருள்பற்றி ஒரு அரிய சொற்பொழி வாற்றினார்கள்.

ல ல ல ல

## நன்கொடைகள்.

### சங்கம்

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| திரு. சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், கே. சி. ஐ. இ., அமைச்சர், கோச்சி | 50 | 0 | 0 |
| ,, ஆர். நடராசப் பிள்ளை, பழநி .... | 5 | 0 | 0 |

### புலவர் கல்லூரி

| | | | |
|---|---|---|---|
| ,, அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ., அண்ணாமலைநகர் | 5 | 0 | 0 |
| ,, ஆர். நடராசப் பிள்ளை, பழநி .... | 1 | 0 | 0 |
| ,, அ. ஜினகுமார முதலியார், கரந்தை .... | 0 | 8 | 0 |

### மருத்துவசாலை

| | | | |
|---|---|---|---|
| ,, க. தியாகராசப் பிள்ளை, பி. ஏ., கல்கத்தா.... | 75 | 0 | 0 |

### திக்கற்றோர் இல்லம்.

| | | | |
|---|---|---|---|
| ,, சுப்பையாச் செட்டியார், ஒப்பந்த வேலை, திருச்சிராப்பள்ளி | 10 | 0 | 0 |
| ,, சோ. வீரபத்திர பிள்ளை, கூடலூர் | நெல் கலம் | | 1 |
| ,, த. சு. நந்திகேசுவரம் பிள்ளை, தஞ்சை | ,, | | 40 |
| ,, பா. இராசராசேசுவரி யம்மையார், தஞ்சை | ,, | | 10 |

கரந்தைக் கூட்டுறவு மின்னியக்கிப் பதிப்பகம், தஞ்சாவூர்.